## ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள்

### உடுமலைப்பேட்டையில் ஓர் நல் வரவேற்பு.

தன்னலங் கருதாப் பொது நலத் தொண்டர்-எண்ணரில் சிறர்க்குக் கண்ணருள் அன்னையர்—உடல் பொருள் உயிரெலாம் உரிமையாக்கித் தம் குலத் தொண்டியற்றும் நம் குலத் தலைவர் பட்டிவீரன்பட்டி உயர் திருவாளர் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்கள் 17—7—28 மாலையில் கனம் தங்கிய உடுமலை உறவின்முறை நாடார்களால் கோவையினின்றும் அழைத்து வரப்பட்டார்கள். கண்டு நாட்டாண்மைக் கழக அங்கத்தினரும், இவ்வூர் பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் தலைவரும், செல்வத்தில் மிக்க பெரியாருமான திருவாளர் என். ஆர். மலையாண்டி செட்டியார் சத்திரத்தில் தலைவருக்கு உண்டியும் உறையுளும் அமைத்துத்தரப்பட்டிருந்தன.

"தாயது வருகை கேட்ட தனிஇளங் குழவி போன்று, சேயமிக் குடையோனுக் கெஞ்சினுள் ளுவகைபூப்ப" என்றபடி இவ்வருந் தலைவரின் வருகையை நீண்ட நாட்களாகப் பெரிதும் அவாவிய இவ்வூர் நாடார் பெருமக்கள் அகமிக மகிழ்ந்தவர்களாய், 17-7-28-இரவு பலரும் ஒருங்கே பெருங் கூட்டமாகச் சத்திரத்திற்குத் திரண்டு சென்று ஒப்பற்ற தலைவருக்கு மலர் மாலைசூட்டி, இன்னிசைக் கருவிகள் ஒலிக்க, நிறைந்த களிப்புடன் மோட்டார் வாகனத்தில் கணக்கம்பாளையம் 4-வது வார்டிலுள்ள உறவின்முறை பொது நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அந்நிலையம் குல மாணவர்கள் பலரால் எழில்பெற ஆக்கப்பட்டிருந்தது. தலைவரின் எழில் நலத்தையும் சொற்பெருக்கையும் விரும்பி வந்த பிற வகுப்பினர் பலரும், நம்மவினரும் சூழ்ந்துள்ள அக் கூட்டத்திற்கு நம் மாபெருந்தலைவர் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் அவர்களே தலைமை தாங்கினர். நாட்டாண்மை திருவாளர் சு. சண்முகவேலு நாடாரால் தலைவருக்கு மலர் மாலை சூட்டப்பெற்றதும் மக்கள் பலரும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். பின்னர் உறவின் முறை நாடார்கள் சார்பாக திருவாளர் பெ. பி. இராமசாமி நாடாரால் தலைவருக்கு வரவேற்பு வாழ்த்துப் பாக்கள் பாடித் தரப்பட்டன. வாழ்த்துப்பாக்கள் பின் வருமாறு:—

வருக தமிழ்நாடர் மரபொளிர் மணியே!
பெருக நங்குலப் பழம்பெரும் பீடு!
வீழ்க பொருளில் வெறும்புன்மொழிகள்!
வாழ்கநம் சமூக மாநிதி ஞானம்!
முடியுடை வேந்தர் மூவருள்ளும்
படிமுழு தாண்ட பாண்டியன் வழிவரு
வீறுசால் வீரப் பெருங்குடி மக்கள்
மாறுகொள் விதிவலி மண்டிட மாற்றார்
தன்னல ஆட்சியிற் றகுமதிப் பிழந்து
துன்னல ராகத் தூற்றப்பட்டும்
உரிமைகள் சிதற ஒதுக்கப்பட்டும்
சரிசமம் நிதிகலை தன்மதிப்பற்று
இருந்தும் உலகில் யிலரோ யாக
வருந்துங் கீழ்மைக் கிரங்கியே கொந்து
நல்லறி விழந் தநங்குல ருறுத்தித்
தொல்லைசெய் மாக்களின் சூழ்ச்சிகள்
துலக்கி
மான வுணர்வும் மாண்புசால் வளர்ச்சியும்
தோன்ற விளங்கும் சுடரே வருக!
நாட்டு மக்கள் நலம்பறித் தென்றும்
வாட்டும் பார்ப்பனர் வளர்நிமிர் ஒடுங்க
உத்தம ராஜன் உனங்கவர் தோழனுய்
நித்தமும் உழைத்திடு நீதியோய் வருக!
ஒடுக்கப் பட்டோர் உயர்நலங் கருதி
சிவராஜ மேலோன் திகழ்நண் பமைந்து
தீரப் போர்புரி வீரனே வருக!
அமைச்சியல் அழிக்க அரிதின் முயன்ற
சூழ்வினை மாந்தர் போழ்வினை எதிர்த்த
காரியக் கொடாச் சீரிய வருக! [தன்
ஏழை மாணவர் இடுக்கண் நீக்கப்
பொன்மாரி பொழியும் புயலே வருக!
தன்னல்ங் கருதாத் தனிப்பெருந்தொ
ண்டால்
அரசினர் மதித்திடு மண்ணலே வருக!
தென்னுடொரீ இப்பண்டுெநாட்களாய்
வணங்கெழு முடிமலை வாழு மெம்மனோர்
நங்குலத் தொண்டின் நலந்தெரிகிலராய்
அங்கியரென்ன அடங்கிவாழ் கின்றனர்
முன்னே றும்நெறி முறைசிறி துணர்க்
திலர்
உயர்பெறுஞ் செல்வ! ஒருதனித்தலைவ!
மயர்வறு மதிநலஞ் சான்ற மானவ!
செந்திரு மகட்குச் சிறந்தநல் லகமாம்
பட்டி வீரன் பட்டியின் வாழ்வே!
சௌந்தர பாண்டிய சற்குண நிதியே!
எங்கட் குரிய இதந்தர
வருக வருகநீ வாழ்கபல் லாண்டே!

கூட்டத்திற்கு வந்திருந்த அன்பர்களில் சிலர் நாடாரின் குலத் தொண்டையும் பொது நலத்தொண்டையும் பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் என்றபடி பிற மக்களுடன் ஏற்றத்தாழ்வு இன்றி அன்புடன் பழகும் திறத்தையும் சிறப்பையும் பொது மக்களிடை விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் எழுந்து வாழ்த்துப்பாக்களிலுள்ள சிலவைகட்கு மறுமொழி புகன்று, நம்மவர்கள் அரசியல், கல்வி, கைத்தொழில் வாணிபம், ஒற்றுமை, மகமை இவைகளில் முன்னேற்றமடையவும், வைக்கம் வீரரின் தன்மதிப்பு இயக்கத்தைப் பின்பற்றி ஒழுகவும், திருமணம், விழா, திவசநாள் முதலிய நன்னாட்களிலும், ஈமக்கடன் முதலிய தீய நாட்களிலும், பார்ப்பனரை அறவே நீக்கி, நம்மவர்களாலேயே கிரியைகளை நடத்துமாறு பலருக்கும் நன்கு விளங்கும்படி தெளிவாக எடுத்துரைத்தார். "நாடார் குல மித்திரன்" "திராவிடன்" "குடியரசு" பத்திரிகைகளை வாங்கிப் படிக்கவும், ஆதரிக்கும்படிக்கும் வேண்டினார். எதிர் காலத்தில் நிகழும் திருமணங்களை தானே இவண் போந்து தன்மதிப்பு திருமணமாக ஒரே பகலில் நடத்திக் கொடுப்பதாகவும் உறுதிமொழி புகன்றார். அதுபோழ்து குழுமியிருந்த அச் சொற்பெருக்கைச் செவிமடுத்த பலரும், நல்லறிவுச் சுடர் கொளுத்தப் பட்டவர்களாய், அங்ஙனமே செய்வதாகவும் தீர்மானித்துப் பெரிதும் களித்தனர். பின்னர் திருவாளர். பெ. பி. இராமசாமி நாடார் அவர்கள் தன்னலம் பாராது குல நலம் நோக்கி வந்த தலைவரவர்களுக்கும் ஏனைய அன்பர்கள் பலருக்கும் அன்பையும் நன்றியையும் செலுத்தி எல்லோர்க்கும் எந்நாளும் இனிது பெருகுமாறு தமிழிறையை இறைஞ்சுகின்றேன் எனக் கூறினதும் கூட்டம் இனிது கலையுற்றது. நம் தலைவர் ஸ்ரீமான் சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள் நீடூழி வாழ்க!

எம். பி. சுவாமிநாத நாடார்,

உடுமலைப்பேட்டை.

# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 5. அத்தியாயம் 12.

### சாம்பரான் விவசாயிகள் துயரம்.

சாம்பரான் ஜனக மகாராஜாவின் ராஜ்யத்தைச் சேர்ந்தது. அங்கே மாந்தோப்புகள் எவ்வளவு அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அவ்வளவு அதிகமாகத்தான் நீலிப் பயிரும் 1917 ஆம் ஆண்டு வரை அங்கு அதிகமாகப் பயிர் செய்யப்பட்டது. சாம்பரான் விவசாயிகள் சட்டப்படி, தங்கள் நிலச்சுவான்தார்களுக்காக மொத்த நிலத்தில் 20-ல் மூன்று பாகத்தில் நீலிப்பயிரையே சாகுபடி செய்யக் கட்டுப்பட்டிருந்தார்கள். இந்த வழக்கத்துக்கு "தீன்காதியா" என்று பெயர். ஏனெனின் 20-ல் மூன்று காதியாக்கள் (அதாவது ஒரு ஏக்கர்) நிலத்தில் நீலிப்பயிர் செய்ய வேண்டியிருந்தது.

அப்போது எனக்கு சாம்பரானின் பெயரும் தெரியாது; பூகோள சாஸ்திரத்தமைப்பில் அந்த ஜில்லா எங்கே இருக்கிறதென்பதும் எனக்குத் தெரியாதென்பதை நான் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும் மேலும் நீலிப் பயிரைப்பற்றியும் எனக்கொன்றும் தெரியாது. நான் நீலிப் பொட்டலங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அது ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாயால் கூற முடியாத அவ்வளவு உழைப்பின் பயனாக உற்பத்தியாகிறதென்பதையும் நான் அறிந்திருக்கவில்லை.

ராஜகுமார ஷுக்லா என்பவரும் இத்தகைய சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வந்தவராதலின் நீலிப் பயிரின் இக்கொடுமையை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று ஆவல் கொண்டார். ஏனெனில், தன்னைப் போலவே ஆயிரக்கணக்கான விவசாயிகள் அத்தகைய கஷ்டத்தை அனுபவித்து வந்தனர்.

### காங்கிரசில் பிரரேபனை.

அவர் என்னை, நான் 1916 ஆம் வருஷத்தில் லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரசுக்குப் போயிருந்த போது, அங்கே தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கேற்ற மனிதனெனப் பிடித்துக்கொண்டார். அவர், "வக்கீல் பாபு எல்லாம் உங்களிடம் கூறுவர்" என்று சொல்லி சாம்பரானுக்கு வரும்படி வற்புறுத்தினார். வக்கீல் பாபு என்பது பாபு வராஜ கிஷோர் பிரசாதைத் தவிர வேறு யாருமில்லை. பாபு வராஜகிஷோர் சாம்பரானில் என் துணைவராக இருந்தார். அவர் தான் பீஹார் பொதுஜன ஊழியத்துக்கு ஒரு உயிராக இருந்து வந்தார். ராஜ குமார ஷுக்லா அவரை என் தங்குமிடத்துக்கு அழைத்துவந்தார். அவர் கறுப்பு அல்பாக்காவில் உடைதரித்திருந்தார். அப்போது அவரிடத்தில் எனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாகவில்லை. அவரும் எளிய விவசாயிகளைக் கொடுமைக்காளாக்கும் வக்கீல்களில் ஒருவராகவே இருக்கவேண்டு மென்றுதான் நான் நினைத்தேன். அவர் சாம்பரானைப்பற்றி சில விஷயங்களைக்கூறிய பின்னர், நான் நேரில் வந்து பார்க்காமல் ஒன்றும் கூற முடியாதென்றும், அவரே காங்கிரசில் அதைப்பற்றிப் பிரரேபிக்கலாமென்றும், அவ்விஷயமாக என்னைத் தொந்தரவு செய்யவேண்டாமென்றும் கூறினேன். ராஜகுமார ஷுக்லாவும் காங்கிரசிடமிருந்து சிறிது உதவியை எதிர்பார்த்தார். அவ்வாறே பாபு வராஜகிஷோரும் காங்கிரசில் சாம்பரான் விவசாயிகளிடம் அனுதாபம் கொண்டுவந்தார். அது ஏகமனதாகவும் நிறைவேறிவிட்டது.

ராஜகுமார ஷுக்லா சந்தோஷப்பட்டபோதிலும், பூரணமான திருப்தியடையவில்லை. அவர், நானே நேரில் சென்று விவசாயிகளின் கஷ்டத்தைக் கண்ணாரக் காணவேண்டுமென்று விரும்பினார். அதற்கு நான் என் சுற்றுப்பிரயாணத்தில் சாம்பரானையும் சேர்த்துக் கொள்வதாகவும் அறிவித்தேன். இதற்குள் அவர் நான் ஒருநாள் தங்கினாலும் போதுமென்றும் நேராகப் பார்க்க வேண்டுமென்றும், கூறினார்.

### ராஜகுமார ஷுக்லாவின் உறுதி.

லக்ஷ்மணபுரியிலிருந்து நான் கான்பூருக்குச் சென்றேன். ராஜகுமார ஷுக்லா அங்கேயும் என்னுடன் வந்தார். சாம்பரான், அங்கிருந்து சமீபத்திலிருப்பதாகவும், ஒரு நாளாவதுதங்க உடனே புறப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அதற்கு நான், அம்முறை என்னை மன்னிக்கும்படியும் எப்படியாவது சாம்பரானுக்கு ஒரு முறை வருவதாகவும் வாக்களித்தேன்.

நான் என் ஆசிரமம் வந்து சேர்ந்தேன். விடா முயற்சியில் சிறந்த அந்த ராஜகுமார், ஆசிரமத்துக்கும் வந்து சேர்ந்தார். "இப்போதாவது ஒருநாள் வரலாகாதா?" என்று கேட்டார். நான் குறிப்பிட்ட தேதியில் கல்கத்தாவில் இருக்க வேண்டுமென்றும், அங்கு வந்து என்னைச் சந்தித்து அழைத்துச் செல்லும்படியும் கூறினேன். நான் எங்கே போவது; என்ன செய்வது; எதைக் கவனிப்பது என்பதையும் நிதானிக்க முடியாத நிலைமையில் திணறிக்கொண்டிருந்தேன்.

நான் கல்கத்தாவில் விபன பாபுவின் வீட்டுக்குப் போவதற்குள் ராஜகுமார ஷுக்லா அங்கே போய்த் தங்கி இருந்தார். இவ்வாறு அந்தக் கள்ளங்கபடமற்ற, விடாமுயற்சியையுடைய விவசாயி என்னைப்பற்றிக் கொண்டார்.

### எனது சாம்பரான் பிரயாணம்.

ஆதலின் 1917-ம் ஆண்டின் ஆரம்பத்தில் நாங்கள் கல்கத்தாவை விட்டு சாம்பரானுக்குப் புறப்பட்டோம். எங்களைப் பார்த்தால் கிராம விவசாயிகளைப்போலிருந்தது. எனக்கு எந்த ரயிலில் எப்படிப் போக வேண்டுமென்பதும் தெரியாது. அவரே என்னை அழைத்துச் சென்றார். நாங்கள் மறுநாள் காலை பாடலீபுரம் போய்ச்சேர்ந்தோம்.

அதுதான் நான் முதல் முதலாகப் பாடலீபுரம் சென்றது. எனக்கு அங்கே யாரும் நண்பர்களோ, அறிமுகமானவர்களோ இருக்கவில்லை. ஆனால் ராஜகுமார ஷுக்லா எளிய விவசாயி என்னும் முறையில் பாடலீபுரத்தில் சிறிதேனும் செல்வாக்கைப் பெற்றிருப்பாரென்று எண்ணினேன். ஆயினும் வழியிலேயே அவரைப்பற்றித்தெரிந்து கொண்டேன். அவர் ஒன்று மறியாத நிஷ்கபடியாக இருந்தார். சில வக்கீல்களைத் தன் நண்பர்களென்று கருதிப் போனார். ஆனால் அவர்கள் அவரைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. பாவம்! ராஜகுமாரை அவர்கள் ஒரு சேவலமானவனென்று தான் கருதினார்கள். உண்மையில் இத்தகைய விவசாயிகளான கட்சிக்காரர்களுக்கும், அவர்களுடைய வக்கீல் மாருக்கும் இடையில் அவ்வளவு அபாரமான வித்தியாசமிருக்கின்றது.

இறுதியில் அவர் என்னை ராஜேந்திர பாபுவின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ராஜேந்திர பாபு பூரிக்கோ, மற்றெங்கோ போயிருந்தார். அவர் பங்களாவில் சில சேவகர்கள் மட்டும் இருந்தார்கள். அவர்கள் எங்களைக் கவனிக்கவேயில்லை. நான் என்னிடம் சிலவற்றை அருந்துவதற்காக வைத்திருந்தேன். ஆனால் சிறிது பேரீச்சம் பழம் வேண்டியதாயிற்று. அதை என் நண்பர் கொண்டுவந்து கொடுத்தார்.

### பீஹாரில் தீண்டாமை.

அப்போது பீஹாரில் தீண்டாமையைக் கடுமையாக அனுஷ்டித்து வந்தார்கள். நான் எந்த ஜாதியைச் சேர்ந்தவனென்பதை அச்சேவகர்கள் அறியவில்லை யாதலின் நான் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கலாகாதென்றும் அவ்வாறு எடுத்தால் கிணறு அசுத்தமடைந்துவிடுமென்றும் கருதினார்கள். ராஜகுமார் என்னை வீட்டிற்குள் இருந்த கக்கூசுக்குப் போகும்படி சொன்னார். ஆனால் சேவகர்கள் அனுமதிக்கவில்லை. இவைகளையெல்லாம் கண்டு நான் பொறுமையை இழக்கவுமில்லை; ஆச்சரியப்படவுமில்லை. ஏனெனில், நான் இத்தகைய அனுபவங்களில் பண்பட்டவன். சேவகர்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள். மேலும், தாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்று ராஜேந்திர பாபு விரும்புகிறாரோ அப்படியே நடந்து கொள்வதாகவும் நினைத்தார்கள்.

இதனால் நான் ராஜகுமார ஷுக்லாவுக்கு எவ்வளவு செல்வாக்கிருக்கிறதென்பதையும், அவரால் என்ன செய்ய முடியுமென்பதையும் அறிந்து கொண்டு விட்டபடியால் இனி அவரை நம்பி யிருப்பதில் பயனில்லை யென்றும் நானே சமாளித்துக் கொண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்றும் அறிந்து கொண்டேன்.

### நடக்கும் மீன்கள்.

சையாம் தேசத்திலுள்ள ஒருவகை மீன்கள் மனிதன் தரையில் நடப்பதைப் போன்றே வால்களால் நடந்து செல்கின்றன. ஒரு மனிதன் மெதுவாக நடந்து சென்றால் எவ்வளவு வேகத்தில் செல்வானோ அவ்வளவு வேகத்திலேயே இம் மீன்களும் நடந்து செல்லுகின்றன

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## விருதுநகரும், கல்லூரியும்.

நாடார் உலகத்தைச்சிறப்பித்திலங்கச் செய்யும் ஆற்றல் உடைத்தாய ஆறு உயர்தரக் கல்விச்சாலைகள் நம் குல மேதாவிகள் பேருழைப்பாலும் அரும் பெரும் முயற்சியாலும் ஆங்காங்கு கட்டப்பெற்றதன் பயனும் ஜன சமூகத்துக்கேற்பட்டிருக்கும் அளவில்லா நன்மைகள் யாவையும் யாவருமறிவர். தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராய் "உலகத்துக்குழைப்பது உயிருக்குழைப்பது" "பரோபகாரமேபிறப்பின்பயன்" என்னும் பல்வேறு கொள்கைகளை கடைப்பிடித்து உயிர் பொருளாவி மூன்றையும் தத்தஞ் செய்து நம் குலப் பெருமையை நிலை நாட்டவென்று கங்கணங் கட்டி நின்று கண்ணுங்கருத்துமாய் உழைத்துவந்த உத்தம சீலர்களாம் மேதாவிகள் பலர் நாடார் சமூகத்தில் தோன்றியதன் பயனும், சிறப்பும் இதனுல் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அத்தகைய மாபெருந் தலைவர்கள் பலர் உயிர் நீங்கி விட்டதால் மகாஜன சங்கத்தின் மேனேக்கங்கள் பல தவறிக்கிடக்கின்றன. நாடார் உலகத்துக்கு கல்லூரி ஒன்று இன்றியமையாததெனக்கண்டு சிவகாசியிலாவது விருதுநகரிலாவது அது ஒன்று ஸ்தாபிக்கவேண்டுமென்று நமது ஜாதீய மகாநாடுகளில் தொடர்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றோம். ஆயினும் இக்கைங்கரியம் இதுகாறும் இனிது நடந்தேருமற்போனது வினைப்பயனுலும் தவக்குறைவாலும் நம் குலத் திலகங்களாய் விளங்கா நின்ற சில பெரியார்களின் அகால மரணமே ஒரு பிரதான காரணமெனக்கூறி வருந்தவேண்டுவதேயாகும். "நின்ற மரங்களில் நெடுமரம் போனுல் நிற்கிற மரமே நெடுமரம்" என்ற பழமொழிக்கேற்ப பெரியார் சிலர் நம்மிடையே இப்போதும் இல்லாமலில்லை. நாடார் நாட்டுக்கு நாயகமாய் நின்று அரும் பெரும் விஷயங்களில் ஈடுபட்டுழைத்து வந்திருக்கிறவரும், முனிஸிபல் சேர்மன் பதவியை வகித்து நகருக்குப் பேருழியஞ்செய்து வந்தவரும் இப்போது நாடார்மகாஜன சங்கம் வைஸ்பிரஸிடெண்டுமான விருதுநகர் ஸ்ரீமான் எம். எஸ். பி. செந்திக்குமாருநாடார் அவர்கள் போன்ற நாடார் குலத் தலைவர்கள் விருதுமாநகரில் திரு அவதாரஞ்செய்துள்ளதால் நமக்கென ஓர் கல்லூரியில்லாப் பெருங்குறை நீங்க நீண்டகாலஞ் செல்லாது என்று திண்ணமுறலாம். விருதுநகர் வாசிகளே! இக்குறை தீர்க்க வேண்டுமென்று அருப்புக்கோட்டை ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர் அவர்களாலும், தூத்துக்குடி ஸ்ரீமான் அரி. அ. செ. கந்தசாமிநாடார் அவர்களாலும் அருப்புக்கோட்டையில் கூடிய 12-வது மகாநாட்டில் கொண்டுவந்த தீர்மானம் இனிது நிறைவேறப் பெற்றது. இதை அமுலுக்குக்கொண்டு வருவது விருதுநகர் வாழ் நாடார் பெருமக்கள் முதற்கடமையாகும். நம் குலத்தோர் வசிக்கும் பற்பல ஊர்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் கல்லூரி நடாத்துவதற்கு வேண்டும் செல்வப் பெருக்கும் ஜனத்திரளும் பிரயாண வசதியும் விருதுநகருக்கே அமைந்திருப்பதால் அவ்வூர் மகாஜனங்களைக் கேட்டுக்கொள்ள நமது மகாநாடும் மனமுவந்தது.

கல்வியாலேயே உலகம் ஆளப்பெற்று வரும் இந்நாளில் நாடார் சமூகம் தூங்கிக் கொண்டிருக்கலாகாது. நம் குலம் கல்வியில் முன்னேற வேண்டுமாயின் நமக்கென கல்லூரிகளிருப்பது அவசியம். கல்லூரிக் கல்வி வேண்டாம்; பிரதமக் கல்வியே போதுமானது என்று பழம் பாட்டுப்பாடுகிறவர்கள், அரசாங்க நிலையையும், கல்வியில் முன்னேறின சமூகத்தார்களுக்கு அங்கிருக்கும் செல்வாக்கையும் அதிகாரங்களையும் உரிமைப்பேற்றையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். உயர்தரக் கல்வியை நாம் புறக்கணித்துக் கொண்டிருப்பது எதிர்கால சுயராஜ்ய அரசாங்கத்தில் நாடார்களுக்குப் பங்கு வேண்டாமென்று சொல்வதேயாகும்.

ஆகையால் நம் குல மக்கள் முன்னேறவேண்டுமாயின், அரசியல் உரிமை வேண்டுமாயின், சுயராஜ்ய காலத்தில்

## போடிநாயக்கனூர்.

### நாடார்கள் பொதுக்கூட்டம்.

நமது காருண்ய கவர்ன்மெண்டார், போடிநாயக்கனூர் நகரபரிபாலன சபைக்கு ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்களை அங்கத்தினராக நியமுகஞ் செய்தது பற்றி போடி நாயக்கனூர்—திருமலாபுரம் நாடார்கள் பேட்டை ஹாலில், நாடார்களின் பொதுக் கூட்டம் 3-8-1928— மாலை 3-மணி சமாருக்கு, இவ்வூர் மிராசுதார் ஸ்ரீமான் ஒய். எஸ். பொன்னையா நாடாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கனம் அக்கிராசனரவர்களும் ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்களும் நாடார் மக்களினிடையே இரு மணிகள்போல்வாத்திய கோஷத்தோடு ஊர்வலத்துடன் ஷை ஹாலில், ஸ்பெஷலாய் உண்டாக்கப் பெற்ற கொட்டகைக்கு "நமது நாடார் மஹா ஜனசங்கம் நீடூழி வாழ்க", "நமது திருவாளர் சௌந்திர பாண்டிய நாடார் எம். யல். ஸி. அவர்களுக்கு ஜேய்", "நமது தலைவர்கள் நீடூழிவாழ்க" என்ற கோஷங்கள் முழங்க அழைத்து வரப்பட்டார்கள். ஸ்ரீமான்களான மீ. சி. சுந்தர நாடாரவர்கள், செ. மு. கருப்பண நாடாரவர்களால் முறையே பிரரேபித்து ஆமோதிக்கப் பெற்று ஸ்ரீமான் ஒய். எஸ். பொன்னையா நாடாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். கடவுள் வணக்கம் பாடப் பெற்றது. ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்களுக்கு, நாடார் பொது மக்களின் சார்பாக ஸ்ரீமான் ரா. க. பெருமாள் நாடாரவர்களால், வரவேற்பு உபசரிப்புப்பத்திரிகை வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்கள் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டு சந்தோஷித்து தமக்கு இப்பதவி கிடைத்தது "நாடார் மகாஜனசங்க"த்தின்பேருதவியினுலென்றும் மகா ஜன சங்கத்தை நாம் ஒவ்வொருவரும் ஆதரிக்கவேணுமென்றும் நமது ஆண் மக்களைப் போல், பெண் மக்களுக்கும் சமமான படிப்பு பயில்விக்க வேணு மென்றும் நாம் ஒற்றுமையோடிருந்து மகமையைச் சீர்திருத்தம் செய்ய வேணு மென்றும், தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இவ்வூர் கிளைச்சங்கத்தைத் தட்டி எழுப்பி, வாசகசாலையும் திறந்து வைக்க வேணு மென்றும், நந்தனவனம் உண்டு செய்ய வேணு மென்றும், நமது குலத் திலுதித்த இளஞ்சிங்க வாலிபர்களுக்கு உற்சாகம் உண்டாக்கக்கூடிய, இனிய மொழிகளால் பேசினுர்கள். அப்பால். போடிநாயக்கனூர் நகர பரிபாலன சபைக்கு ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்களை அங்கத்தினராக நியமுகஞ் செய்தது பற்றி நமது நாடார் மக்களின் அளவிலாச் சந்தோஷத்தைநமது காருண்யகவர்ன்மெண்டாருக்கு தெரிவித்துக் கொள்ள வேணு மென்ற தீர்மானம் ஸ்ரீமான்களான எ. முத்து நாயக நாடாரவர்கள், எஸ். ஆர். சுவாமிக்காளை நாடாரவர் களால் முறையே பிரரேபித்து ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது. அத்தோடு நமது மகா ஜன சங்கத்திற்கு இவ்வூரில் போதியவாறு அங்கத்தினர்கள் சேர்க்கும் பொருட்டுக் கூடிய சீக்கிரத்தில் ஓர் பொதுக் கூட்டம் கூட்ட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது. பின்தேக்கச்சேரி நடந்து, தாம்பூலம், சந்தனம், கற்கண்டு, பரிமாறப்பட்டு, நாடார் மக்களின் சார்பாகஸ்ரீமான் எஸ். ஆர். சுவாமிக்காளை நாடாரவர்களால் வந்தனேபசாரம் கூறப் பெற்று முக்கியஸ்தர்களுக்குப்பூமாலைகள் சூட்டப்பட்டு, 6மணி சுமாருக்கு கூட்டம் முற்றுப் பெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகின்றார்.

---

சமவுரிமை வேண்டுமாயின் அதற்குத் துணைக் கருவியாயிருக்கும் உயர்தரக் கல்வியை விருத்தி செய்வான் பொருட்டு விருதுநகர் வாழ் அண்ணல்காள்! கல்லூரி கட்ட முன் வாருங்கள் முன் வாருங்கள்.

ஸி. தங்கையா நாடார்,
தென்திருவிதாங்கூர்.

## வாலிப நாடார்சங்கம், கல்லூருணி.

### ஆரம்பவிழா.

இச்சங்கத்தின் ஆரம்பவிழா விபவ ஹு ஆடி மீ 18உ (2-8-28) மாலை 5 மணி முதல் 10 மணி வரை ஷை சங்கம் ஆபீஸ் முன் அமைத்திருந்த அழகிய பந்தலில், ஏற்கனவே வெளியிட்டிருந்த அழைப்பிற்கிணங்க உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்து குழுமியிருந்த சுமார் 300 ஜனங்கள் மத்தியில் வெகு விமரிசையுடன் நடைபெற்றது.

சங்கம் பிரஸிடெண்ட், எஸ். பி. அய்ய நாடாரவர்களால் பிரரேபிக்கப்பெற்று காரியதரிசி புன்னைமுத்து நாடாரால் ஆமோதிக்கப்பெற்று, காளையார் கரிசல் குளம் இந்திய கிறிஸ்தவ திருச்சபை போதகாசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ ரெவரெண்டு எஸ். ஞானமுத்து போதகரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பின்னர் விஷய சூசிகையில் குறிப்பிட்ட சி. எஸ். சிதம்பரநாடார் ஆஜரில்லாமல் கே. எ. புன்னைமுத்துநாடாரால் கடவுள் வணக்கம் செய்யப்பெற்றதும், எஸ். டி. விநாயக மூர்த்தி நாடாரவர்களால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப் பெற்றது.

அக்கிராசனரவர்கள் வாலிப நாடார் சங்கத்தை ஆதரிப்பது அவசியமென்றும் இந்த வாலிப நாடார் சங்கத்தின், ஆதரவில் நடைபெறும் 'சதானந்த வாசகசாலை' நிர்மாணித்திருப்பது, இந்த கிராமத்திற்கு மிகவும் இன்றியமையாததாகுமென்றும், அதிலும் நாடார்களும், நாடார் அல்லாதவர்களும் வந்து இலவசமாய் படிக்க ஏற்பாடு செய்திருப்பது மிகவும் விசேஷிக்கத் தக்கதென்றும், இந்த வாசகசாலைக்கு ஒவ்வொருவரும், தகுந்த உதவி செய்து போற்ற வேண்டியதவசியமென்றும், இன்னவையன்ன சில விஷயங்களை இன்னுரையாக முன்னுரை செய்தார்கள்.

பின்பு கல்லுமடம் தேவசகாயம் உபாத்தியாயர் அவர்கள் 'கல்வி' என்பதையும், எஸ். டி. ஏ. மிஷன் கே. ஜி. சாமுவேல் நாடாரவர்கள் 'சுகாதாரம்' என்பதையும் பற்றி பல முக்கிய மேற்கோள்களுடனும் விரிவுடனும் பிரசங்கம் செய்தனர்.

பிறகு அருப்புக்கோட்டை, ஜீவகாருண்யப் பிரசாரசபை காரியதரிசி அ. பெ. இரத்தினவேல் நாடாரர்கள் 'ஜீவகாருண்யம்' என்னும் அரிய விஷயத்தை இனிவான மொழிகளால் பல பல மேற்கோள்களுடன் உடன்யாசித்தார்கள்.

அதன் மேல் 'வாசகசாலையின் பயன்' என்பதுபற்றி சங்கம் காரியதரிஸி எல். எஸ். கனகசபாபதிநாடாரவர்கள் 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்னும் யுத்திக்கிணங்க சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர் விஷய சூசிகையில் குறிப்பிட்டவரும், ஏற்கனவே காரியதரிஸிகள்கேட்டுக்கொண்டபடி சம்மதக் கார்டு எழுதியவரும் ஆகிய தி. கருப்பையா பிள்ளை அவர்கள் தகவலின்றி எக்காரணம் கொண்டோ வரவில்லையாதலால் "நாடார்களின் முற்கால தற்கால நிலைமைகளும், செய்யவேண்டிய கடமைகளும்" என்பதைப்பற்றி "நாடார் குல மித்திரன்" கட்டுரையாளர் அருப்புக்கோட்டை ஏ. கே. அண்ணமலைநாடாரவர்கள் சொற்கள் நிகழ்த்தினுர்கள்.

முடிவுரையாக அக்கிராசனுதிபதியவர்கள், கல்வி, சுகாதாரம், என்பவைகளையும் விசேஷமாக ஜீவகாருண்யம், கொல்லாமை, புலாலுண்ணமை என்பவைகளையும், மீண்டும் வாலிப நாடார் சங்கம், சாதானந்த வாசகசாலை ஆகிய வைகளையுப் பற்றியும், இவ்வூர் நாடார்களுக்குள் ஒற்றுமையில்லாதிருப்பது மிக வருந்தத்தக்க தென்றும், எனவே சீக்கிரம் ஒற்றுமைக்குரிய முயற்சி செய்வதவசியமென்றும், நாடார் வாலிபர்கள் யாவரும் இந்த வாலிப நாடார் சங்கத்திற்கும், வாசகசாலைக்கும் பேருதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறுர்கள் என்றும், இந்தச் சங்கத்தின் வாலிபர்களுடைய தியாகத்தாலேயே, சலியா உழைப்பினுலேயே இவ்வூர் நாடார்கள் ஒற்றுழைப்பும், சங்க வளர்ச்சியுமாக வேண்டுமென்றும், வாலிப நாடார் 2—வது மகாநாட்டில் செய்திருக்கிற, கல்வி ... பெண்களுக்கு அவசிய...

ணம் செய்து கொள்ளக்கூடாது' என்ற தீர்மானத்தையும் எடுத்துக்காட்டி பெண் கல்வி அவசியமென்றும், பற்பல மேற்கோள் உதாரணங்களுடனும், இனிவாயும், தெளிவாயும், குதுகலமாயும் சுமார் 1—மணி நேரம் வரை பேசினுர்கள்.

அக்கிராசனுதிபதியவர்களுக்கும், பிரஸிடென்டவர்களுக்கும், பல முக்கியஸ்தர்களுக்கும், இவ்விழாவிற்கு புஷ்பம், போஜனம், சர்க்கரை, தாம்பூலம், சோடா கலர் முதலியன இனும் செய்த அன்பர்களுக்கும் சங்கம் காரியதரிஸி எல். எஸ். கனகசபாபதிநாடார் அவர்கள் மிகக் கண்ணியமான வந்தனேபசாரம் சொல்லி புஷ்பஹாரங்கள் சூட்டி, சர்க்கரை சந்தன தாம்பூலம் வழங்கிய பின் சபை இனிது கலைந்தது.

எல். எஸ். கனகசபாபதி நாடார்,
கே. ஏ. புன்னைமுத்து நாடார்,
காரியதரிஸிகள்.

## கற்றும் கசடுறமொழி வதேன்?

"கல்விக்கழகு கசடற மொழிதல்" என அதிவீரராமபாண்டியர் தமது வெற்றி வேற்கையில் கூறியுள்ளார். பாலர் பாடமாகவே இச்செய்யுட்கள் போதிக்கப்பட்டு, பாவியர் முதல் வயோதிகர் வரையும் அனுஷ்டிக்கப்பட வேண்டியதாயும் அனுஷ்டிக்கப்படுகிறதாயுமிருக்கிறது. நம் தமிழ் நாட்டில் ஓர் காலத்தில் பாடையானது சிறப்புற்று நின்ற தென்பதற்குப் பரிமேலழகர் உரையில் வழங்கும் நடையே தக்க சான்றுபகரும். நாளுக்கு நாள் தமிழ் மலினமடைந்து வந்து கொண்டிருக்கிற போதே அங்குமிங்குமாக சில பண்டிதர்கள் கிளம்பித் தம் தாய் மொழியின் பெருமையை விளக்கி வந்தனர். இப்போதும் வருகின்றனர். தற்காலத்து இவ்வாறு தாய் மொழி வளர்ச்சிக்குக் காரணமாக நூற்கள் வெளியிடும் சிலருள் திரு. வி. கலியாணசுந்தர தேசிகரும், ஆசிரியர்-மறைமலை அடிகளும் சிறந்து விளங்கும் இரு ரத்தினங்களாவார்.

25-7-28-ல் சென்னை ராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் ஆண்டு விழாவின் மூன்ருந்தினத்து மறைமலை அடிகள் எனும் ஆசிரியர் வேதாசலம் அவைத்தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவில் "நமது சைவாகமப்பிரகாரம் ஜாதி பேதமே கிடையாது. ஆனல் தற்காலத்து வாணியர், புலையர் முதலியோரைப் பல விடங்களில் ஆலயங்களுள் விடுவதில்லை. சாணுர்களையும் அதாவது சான்றோர்களையும் பாண்டி நாட்டில் ஆலயத்துள் விடுவதில்லை. ஆனுல் அவ்வம்சத்துதித்த ஏனுதி நாயனுரைஉருவமமைத்துவணங்குகிறோம். பல ஜாதியின் நாயனுர்களையும் உருக்கொண்டு வணங்குகிறோம்" என்றுர்.

காவி முக்காடிட்டுத்துறவி போலத் தோற்றும் வேத அசலமே தான் கற்ற கல்வி நெறி தவறி அறுவகை வழக்குள் ஒன்றுகிய "போலி" வழக்கில் பேசுவாராயின் நாட்டுப் புறத்துப் பாமரமக்களைப் பேசுவானேன்? கசடறக்கற்று அதற்குத் தக நிற்க என்பது சொல் மாத்திரத்தில் கொள்ள வேண்டியது தான் போலும்! இலக்கண வழக்கு அழகாக நிற்கும் போது ஏன் போலி வழக்கு உபயோகத்தில் வரவேண்டும்? மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற பழமொழிப்படி இவ்வாசிரியர் கல்வி கற்றுக் காவிகட்டியும் கன்மஷம் நீங்கப்பெற்றுரில்லை போலும்! அரசியலாரும் இப்போலிப்பதத்தை உபயோகித்தலாகாதெனக் கூறியிருக்க இத்தமிழ் மகன் கூறுவது மிக வியப்பை அளிக்கிறது. இனியேனும் வேதாசல ஆசிரியரும், அவர் போன்ற ஏனைய கற்ற பிரமுகர்களும் போலி வழக்கை நீத்து இலக்கண வழக்கையே பரவச் செய்வார்களாக. தமிழ் மணம் இலக்கண முறையே திகழுக.

ஏ. கே. நாடர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேதும் பின்றி மேபோருட்கு மெவ்விட
த்தும் பிரிவறநின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்
விபவ ௵ ஆடி மீ ௨௯ உ

## முதற்கௌன்ஸில்.

நாடார் மகாஜன சங்கம் தலைமை ஆபீசை மதுரையிலிருந்து பட்டிவீரன்பட்டிக்கு மாற்றிவிட வேண்டுமென்று அருப்புக்கோட்டை மகாநாட்டில் தீர்மானித்ததற்கிணங்க மாற்றப்பெற்று 8—5—28 ல் ஸ்ரீமான் வ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்கள் மாளிகையில் சங்கம் வைஸ் பிரஸிடெண்டு விருதுநகர் ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமார நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் முதலாவது கௌன்ஸில் மிகவும் ஒழுங்காக நடைபெற்றது. அதன் முழு விபரங்களையும் மற்றொரு பத்தியில் பிரசுரம் செய்திருக்கிறோம்.

சங்கத்தின் மீது மிக்க அபிமானமுள்ள மாபெருந் தலைவர்கள் வாழும் பட்டிவீரன் மாநகருக்கு சங்கம் ஆபீஸ் மாற்றப்பெற்ற காரணத்தை முன்னிட்டு ஆவலுடன் பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆலோசனைக்கு வந்த பல விஷயங்களில் முக்கியமானது சங்கத்தின் பொருளாதார நிலைமையை எவ்வாறு விருத்தி பண்ணலாமென்பதேயாம். சங்கம் நிர்வாகம் சரியாக நடைபெறுவதற்குப் போதுமான மூலதனம் வேண்டும். ஏழை மாணவர்கள் குறையைச் சரியானபடி நிவர்த்தி செய்வதற்குக் குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபாயாவது பண்டிலிருக்க வேண்டுமென்பதை முன்னிட்டு அருப்புக்கோட்டை மகாநாட்டில் இன்னுமொரு லாட்டரி நடத்த வேண்டுமென்று செய்த தீர்மானத்தை அங்கீகாரம் பண்ணி இரண்டு லட்ச ரூபாய் லாட்டரி ஒன்று நடத்த வேண்டுமென்று ஒரு திட்டம் நிறைவேறியிருக்கிறது. அதைப்பற்றிய முழு விபரங்களும் கூடிய சீக்கிரம் வெளியிடக்கூடும்.

சங்கத்திற்கு அதிகமான மெம்பர்கள் சேர்வதற்கும், போதுமான மூலதனம் சேர்ப்பதற்கும் அனுகூலமாக சங்கம் சட்டத்திலுள்ள 7-வது விதியில் ஏ பாராவில் ஸ்பெஷல் அங்கத்தினர் வருடம் ஒன்றுக்கு 12 ரூபாய் சந்தாச் செலுத்த வேண்டுமென்றிருப்பதில் அல்லது மொத்தமாக ஒரே தடவையில் ரூ 60 சந்தாச் செலுத்துகிறவர்கள் ஜீவியகால ஸ்பேஷல் அங்கத்தினராக இருந்து வருவார் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் ஸ்பெஷல் அங்கத்தினர்களுக்கு மிகச் சகாயமிருக்கிறது. சங்கத்திற்கும் நிரந்தரமான அங்கத்தினர்கள் குறையாதிருக்க இடமேற்படுகிறது. பிரசாரகர்களை வைத்து செலவுசெய்து பண வசூல் பண்ணும் சிரமமில்லாமலும் போகிறது. ஆனால் விதியைப் திருத்திவிட்டவுடனே ஜீவிய அங்கத்தினர் வந்து குவிந்துவிடமாட்டார்கள். எல்லாம் முயற்சியைப் பொறுத்திருக்கிறது. புதிய காரியதரிசிகள் எவ்வாறு முயற்சித்து எவ்வளவு பணம் மூலதனம் சேர்ப்பார்களென்பது இனிமேல்தான் தெரியவருமென்று சொல்லத் தேவை இல்லை. ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் சேர்த்துவிடுவார்களென்று இப்போதே சொல்லலாம். நாடார் மகாஜன சங்கம் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு குலாபிமானிகளும் பிரபுக்களுமாகப் பலர் காரியதரிசிகளாக இருந்துவந்தார்கள். வெகு திறமையுடன் நிர்வாகத்தை நடத்திவந்தார்கள். ஜன சமுகத்தில் நல்ல கிளர்ச்சிகளை உண்டு பண்ணினார்கள். ஆனால் சங்கம் என்றும் நின்று நிலவுதற்கேதுவாகிய மூலதனத்தை ஒருவரும் கவனிக்கவில்லை. வாயளவிலும் எழுத்தளவிலுமே நின்றுவந்தது. ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடாரவர்கள் காலத்தில் காரியம் கைகூடிவந்தது. அந்தப் பெருமை அவருக்கும் அவருடைய சகாக்களுக்கும் சார்ந்தது. குறைந்த பட்சம் நாற்பதினாயிரம் ரூபாய்கள் நாடார் மகாஜன சங்கத்துக்குக் கிடைத்தது அவருடையவும் அவர் சகாக்களினுடையவும் முயற்சியினாலேயே யென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இப்போதிருக்கிற 40 ஆயிரம் ரூபாயுடன் இன்னும் 60 ஆயிரம் ரூபாய் சேர்ப்பது புதிய காரியதரிசிகளுக்கு அவ்வளவு பெரும் பாரமல்ல. மிகச் சுலபமான காரியமென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் எல்லாம் காரியதரிசிகள் பொறுப்பென்று மற்றுங் குலாபிமானிகள் வாளாவிருந்து விடக்கூடாது. எவ்வெவ் வழிகளில் அவர்களுடைய முயற்சிக்கு ஒத்தாசை செய்ய முடியுமோ அவைகளிலெல்லாம் செய்யச் சிறிதும் தயங்கலாகாது.

நாடார் மகாஜன சங்கத்தை மதுரையை விட்டு மாற்றவேண்டுமென்று முன் பல தடவைகளில் முயற்சி செய்த போதெல்லாம் மாற்றுவதற்கு ஜனங்கள் சம்மதிக்கவில்லை. ஆனால் பட்டிவீரன்பட்டிக்கு மாற்ற வேண்டுமென்பதை அருப்புக்கோட்டை மகாநாடு மனப்பூரணமாக ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. பட்டிவீரன்பட்டியானது ஒரு சிறு கிராமமே என்று யாரும் சுலபமாய் நினைக்கலாம். ஆனால் உலகத்துக்கெல்லாம் மத்திய சபை சிறு ஹாலண்டு தேசத்திலிருந்து வந்திருக்கிறது. உலகத்தையும் இங்கிலாந்து தேசத்தையும் சீர்தூக்கிப்பார்த்தால் இங்கிலாந்தை ஒரு சிறு கிராமமென்றுதான் சொல்லவேண்டும். சிறு கிராமங்களிலிருந்துதான் பெரிய நகரங்களும் பெரிய மனிதர்களும் மகாத்மாக்களும் ஆசிரியர்களும் உண்டாகியிருக்கின்றார்கள். நமது நாடார் மகாஜன சங்கம் பிறப்பதற்கு மூலகாரணமாயிருந்த மூவரில் பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் வ. பு. அ. மாரிமுத்து நாடாரவர்களும் ஒருவராவர். ராவ்பஹதூர் ரத்தினசாமி நாடாரவர்களுக்கு முக்கிய பக்கத் துணைவராயிருந்து வந்தவரும் அவர்தான். ஸ்ரீ ரத்தினசுவாமி நாடாரவர்கள் காலஞ் சென்றபிறகு சிறிது தளர்ந்துபோன சங்கத்தைத்தட்டியெழுப்பி மதுரைக்குக் கொண்டுவந்தவர்களில் முக்கியமானவரும் அவர்தான். பின்னர் பலதுறைகளிலும் சங்கம் பிரகாசித்தது பட்டிவீரன்பட்டியின் முயற்சியாலென்றும் சொல்லலாம். ஸ்ரீமான் வ. பு. அ. மாரிமுத்து நாடாரவர்கள் சிறிது காலமாய் தேக அசௌகரியத்தினால் சங்க வேலைகளில் பிரவேசிக்கவில்லையென்றாலும் சங்க முன்னேற்றத்தில் அவருடைய எண்ணம் முன்சென்றுகொண்டிருந்ததென்பதை நாம் அவருடைய சம்பாஷணை மூலம் அறிந்திருக்கிறோம். ஆகையால் ஸ்ரீமான் மாரிமுத்து நாடாரவர்களுடைய பூரண ஒத்துழைப்பும் புதிய காரியதரிசிகளுக்குக் கிடைத்து நமது சங்கத்துக்கும் நாடார் ஜாதிக்கும் புதுப் பலன் உண்டாகுமென்று பூரணமாக நம்புகின்றோம். புதிய காரியதரிசிகளும் அவருடைய ஆசீர்வாதத்தைப்பெற வெகு ஆவலுடனிருக்கக்கூடும். அவ்வண்ணமே பெற்று அவர்கள் வேலைகள் விக்கினமின்றி நடைபெற வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நமது புதிய காரியதரிசிகள் புதுப்பலத்துடன் புது வேலைகள் செய்யப் புகுமுன், புதிய அரசியல் சீர்திருத்தத்திற் புகுந்த புது எலெக்ஷன் நோயால் சில விடங்களில் வாடியிருக்கும் நமது நாடார் குல மக்கள் மன விகற்பங்களையும் மாற்றவேண்டியது முக்கியமான புது வேலையென்பதை நமது காரியதரிசிகளுக்கு ஞாபகப்படுத்துகிறோம். ஆங்காங்குள்ள ஏழை மக்கள் பசியால் வருந்துவதை நிவர்த்திப்பதற்கு ஏற்ற சாதனம் என்னவென்பதையும் அவர்கள் சிந்திப்பார்களென்று நம்புகின்றோம். நாளை நாளை யென்று நாட்கடத்து போகவிடாமல் நன்றென்பதை இன்றே செய்ய அவர்கள் எண்ணுவார்களென்று நம்புகின்றோம். பழைய காரியதரிசிகளெல்லாம் புதுக் காரியதரிசிகளின் வேலைகளுக்குப் பூரண ஒத்தாசை செய்வார்களென்று நாம் சொல்லத் தேவையில்லை. சொல்லாமலே பெரியோர் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை.

---

## குறிப்புகள்.

### மகிழ்வுறுகின்றோம்.

கும்பகோணம் ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டிக்கு தஞ்சாவூர் ஜில்லா போர்டு மெம்பரும், "நாடார்மகாஜன சங்கம்" நிரந்தரத் தலைவருமான பொறையாறு ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்களை ஒரு அங்கத்தினராக ஸர்க்கார் நியமனஞ் செய்திருப்பது பற்றி மகிழ்வுறுகின்றோம். முன்னர் தஞ்சைஜில்லாவில் தேவஸ்தானக் கமிட்டிக்கு நாடார் அங்கத்தினர் ஆகயோக்கியதையுள்ளவரா? என தமக்குள்ள ஆசங்கையை அஜ்ஜில்லாவின் பொது ஜனங்கள் பால் தெளிந்து தெளிவுறுமாப் போல் மாஜி மந்திரி கனம். அரங்கநாத முதலியார் கேள்வி கேட்டு நாடார் பெருமக்களின் மனதைப் புண்படுத்திவிட்டார். இவ்வண்ணம் புண்படுத்தியதற்கு முதலியார் நாலுபக்கங்களிலிருந்தும் இடி கொண்டு விழித்தார். என்னவோ நல்ல காலமாக அவரின் மந்திரி பதவி அற்ப ஆயுளுள்ளதாய் முடிந்துவிட்டது. இன்னவரின் பொறுப்பற்ற செய்கையினால் பொங்கிக்கிடந்த நாடார்களின் ஆத்திரம், தற்போது தேவஸ்தானக் கமிட்டிக்கு நாடார் ஒருவர் அங்கத்தினராக நியமனம் பெற்றிருக்கிறார் என்ற சந்தோஷச் செய்தியினால் சாந்தியடையும் என்பதிற் சந்தேகமில்லை. நாடார்களின் தன்மையறிந்து நியாயம் பிறழாது நாடார் ஒருவரை தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினராய் நியமனம் செய்ததுபற்றி ஸர்க்காருக்கு எமது நன்றியறிதலைக் காட்டிக் கொள்கின்றோம். ஆண்மையில் அருப்புக்கோட்டையில் நடைபெற்ற நாடார் 12-வது மகாநாட்டின் திறப்பாளர் கனம். முதன் மந்திரி டாக்டர். பி. சுப்பராயன் அவர்கள் அம் மகாநாட்டில் பேசிய தமது பிரசங்கத்தில் தேவஸ்தானக் கமிட்டிக்கு நாடார்களையும் அங்கத்தினர்களாக நியமிப்பதற்குப் பிரயாசையெடுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தபடி அன்னவர் இந்நியமனத்திற்குக் காரணபூதரா யிருந்தமைக்கு அவருக்கு எமது மனப்பூர்ணமான வந்தனத்தைச் செலுத்துகிறோம். இம்மாதிரியே மற்றும் ஜில்லாக்களிலும் ஜாதி வித்தியாசம் ஒழிக்கதற்கறிகுறியாக தேவஸ்தானக் கமிட்டிகளில் நாடார்கள் அங்கத்தினர்களாய் நியமிக்கப்படுவார்கள் என நம்புகிறோம்.

### ஜெயம் ! ஜெயம் !!

பர்தோலியில் நடந்து வந்த வரிகொடா வியக்கம் இறுதி வரையினும் சாத்வீகப் போராட்டத்தில் நின்று சாதித்து ஜெயம் பெற்றுவிட்டது. இதன் தளகர்த்தர் வல்லபாய் படேல் வெற்றிக்கரை காணும்படி செய்து வந்த அரிய வேலைகள் போற்றற்குரியனவாம். ஐயன் மகாத்மாகாந்தியடிகளும் இதில் கண்ணும்கருத்துமாயிருந்துவழிகாட்டிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவின் சுதந்திரப் போராட்டவெற்றி பர்தோலியில் தான் காணக்கிடக்கின்றது என்பது அடிகளின் கருத்து. இக்கருத்துக்கியைய இந்தியாவின் சுதந்திர வெற்றிக் குறியாக பர்தோலியில் ஜெயம் கிடைத்துவிட்டது பற்றியும், பர்தோலி விவசாயிகளின் துயரங்கள் தொலைந்ததென்றும் யாம் களிபேருவகை கொள்கின்றனம். வரிகொடாவியக்கம் உண்டாகி சாத்வீகப் போராட்டம் நிகழ்ந்ததற்கு அரசாங்கத்தார் அநீதியாக வரியை உயர்த்தியதேயாகும். பர்தோலி தாலுகா விவசாயிகள் எவ்வளவு துன்புறினும் இவ்வநீதத்தை யொழிக்க வரிந்து கட்டினார்கள். நின்று சாதித்தார்கள். அதிகாரிகள் அவர்களை முறியடிப்பதற்கு எத்தனை வித்தைகளோ காட்டினார்கள். ஆனால் உண்மைக்கு உயிர்விடவும் சித்தமாயிருந்த அவர்களிடம் ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் விவசாயிகளின் கோரிக்கைகளே நிறைவேறின. இச்சம்பவம் சத்தியாக்கிரக இயக்கத்தின் வல்லமையையுணர்த்துகின்றது. சத்தியாக்கிரகிகள் பர்தோலி விவசாயிகளைப் பின் பற்றுவார்களாக. இவ்வித சாதிப்பும் அதற்கான ஒத்தாசையும் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இல்லாமற்போன தோஷத்தினால் அவர்களின் கோரிக்கைகள் முற்றுப்பெறாது போயினவென விசனிக்கிறோம். பர்தோலி இயக்கம் இந்தியர்களின் அடிமை மனப்பான்மை யொழிவதற்காம் வண்ணம் முறுகி யெழுந்து வெற்றி பெற்றது குறித்து யாம் மிகவும் மகிழ்வுடன் அதைப் பாராட்டுகின்றோம்.

### அந்தோ ! காலஞ்சென்றார்.

நமது ராமநாதபுரம் ராஜாவும் ஷை ஜில்லா பிரஸிடெண்டுமாகிய இராஜா முத்துராமலிங்க சேதுபதியவர்கள் 4-8-28-ல் இராமநாதபுரத்தில் காலஞ் சென்றுவிட்டதாக அறிந்து மிகவும் வருந்துகின்றோம்.

இவர் இராமநாதபுரம் ஜில்லாவையும் தமது சமஸ்தானத்தையும் வெகுதிறமையாக நடத்திவந்திருப்பதுடன் தமது சமஸ்தானத்தைப் பழைய காலத்திற் போலின்றி புதிய முறையில் நல்லாட்சி புரிந்து வந்தார். தென்னிந்திய ஜமீன்தார் தொகுதியில் சென்னைச் சட்டசபைக்கு போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பெற்று வந்தார். சில ஜமீன்தார்களைப்போல் தம் வீட்டிற்குள்ளடைக்கப்படாமல் பற்பல பொது விஷயங்களில் தலைமை வகித்து வந்தார்கள். சிவகாசியிற்கூடிய நாடார் மகாநாட்டில் தலைமைவகித்தார்கள். நாடார்களுக்கு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

கோயில் விஷயமாக தம் முன்னோர்கள் செய்த பிசகை பகிரங்கமாய் கண்டித்துப் பேசினர். மறவர்களுக்கும் நாடார்களுக்கும் சுயநலக்காரர்கள் மூட்டிவைத்த பகையானது ராஜாவுடைய முயற்சியால் நீக்கப்பட்டதென்று தான் சொல்லவேண்டும். ஜில்லா நிர்வாகத்திலும் நாடார்களுக்கு ஞாயமாகத்தான் நடந்துவந்தார். இத்தகைய உத்தமர் தமது நாற்பதாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்ததுபற்றி யார்தான் விசனிக்காதிருக்க முடியும்? அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய மூத்த குமாரர் ராஜா பாஸ்கர சேதுபதியவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## இது அநியாயமன்றோ ?

உத்தம தேச பக்தரும் வைக்கம் வீரரும் சுயமரியாதை கர்த்தாவுமாகிய திரு. ஈ. வி. இராமசாமிநாயக்கரவர்களை ஈரோட்டில் அரஸ்ட் செய்து ஜாமீனின்றி விடுவித்து 10௳ விசாரணை ஏற்பட்டு அது மறு தினத்தில் ஒத்தி போடப்பட்டிருப்பதாய் அறிகிறோம். இவர் என்ன குற்றத்திற்காக அரஸ்ட் செய்யப்பட்டார்? ஏழைத்தொழிலாளிகளை முதலாளிகள் கொடுமையாக நடத்தக்கூடாது; நடத்தினால் அவர்கள் முதலாளிகளை சாத்வீகமாய் எதிர்ப்பது ஞாயமாகுமென்று பிரசங்கம் செய்தது குற்றமாம்! பகிரங்கமாய் கொலை செய்து போலீசாரால் அரஸ்ட் செய்யப்பட்ட ஒரு குற்றவாளியை குற்றமற்றவனென்று கோர்ட்டில் விவாதித்துப் பிரசங்கிக்க எத்தனையோ நீதிவாதிகளுக்கிடமிருக்கும் இந்த ராஜ்யத்தில் ஏழைத்தொழிலாளிகள் முதலாளிகளிடத்தில் அதிகச் சம்பளம் கேட்க வாதாடுவது ஞாயமென்று சொன்ன திரு. நாயக்கருக்கும் அரஸ்ட்டா? இது அநியாயமன்றோ?

திருநாயக்கர் இவ்வரஸ்ட்டுக்கும் வேறெந்த மிரட்டுக்கும் பயந்தவரா? அல்ல அல்ல. அரஸ்ட்டின் ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும் அதி நுட்பமாய் அளந்து பார்த்தவர். நம ஈ. வி. ராமனை எந்த ராமனென்று இன்னும் பலர் அறியாதிருப்பது மகா விந்தையே. அவர் விலங்கினங்களைத் துணை விரும்பிய சீதா ராமனுமல்ல; கோதா ராமனுமல்ல; சிறைச்சாலையைத் தவச்சாலையாய்க்கொண்ட தைரிய ராமனுமாம். மனித வாழ்க்கைக்குப் புனிதமான மரியாதையை இழந்த மக்களுக்கு சுயமரியாதையை அருள் செய்ய அவதாரம் செய்திருக்கும் மரியாதைராமனுமாகும். அவர் தம் உடல் நலம் பேணியாவது உயிர் நலம் பேணியாவது தொழிலாளர்களுக்குப் பரிவாகப் பேச முன் வரவில்லை. தொழிலாளருமில்லை; அவர்கள் தலைவருமில்லை; தொழில் நிறுத்தம் செய்யத் தூண்டிய வருமில்லை. தொழிலாளர் தலைவர்கள் நாங்கள் தானென்று சொன்ன சோத்து முட்டிராமன்கள் நிலைமாறிவிட்டார்களே; தொழிலாளர்களுக்கனுதாபிகள் நாங்களன்றி வேறில்லையென்ற காங்கிரஸ் ஊர்வழி ராமன்கள் அரஸ்ட்டு வருமென்று பயந் தொதுங்கிவிட்டார்களே என்று தான் நமது ஏழை பங்காளன் ஈ. வி. ராமன் தைரியமாக மரியாதையுடன் பேச முன் வந்தார். சாத்வீகத்தையும் தைரியத்தையும் மரியாதையையும் அடக்கி விடலாமென்று நினைப்பது ஆகாத காரியந்தான்.

நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக விருக்கும் பார்ப்பனீயத்தையும் தீண்டாமையையும் குழி தோண்டிப் புதைக்க விருக்குந்தருவாயில் திரு. நாயக்கரை அரஸ்ட்டு செய்தது அநியாயமாகும். காட்டுமுயலைநாட்டு நாய்கள் பல சூழ்ந்து அதைக்கொன்று தின்றுவிடக்கூடிய பரபரப்புக் காட்டுதல் போல் திரு. நாயக்கர் வெகு தைரியத்துடன்-சலியா முயற்சியுடன் தமிழ் நாட்டிற் புதிதாகக் கட்டி வரும் சுயமரியாதைக் கோட்டையை இடித்துத் தகர்த்துவிட எண்ணி பல எதிரிகள் சூழ்ந்து வெடி தீர்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் திரு. நாயக்கர் மீது கவர்ன்மெண்டார் பாணம் தொடுத்திருப்பது பொது ஜனங்களுக்கு ஆத்திரமேற்படுத்தக்கூடும். ஆகையால் எறிந்த பாணத்தை இலக்குவாய்த் திருப்பிக்கொள்[illegible]

## எஸ். ஐ. ஆர். வேலை நிறுத்த முடிவு.

### தொழிலாளர் கோரிக்கைகள் முடியவில்லை.

### திரு. கண்ணப்பர்—நாய்க்கர் கைதியானார்கள்.

தென்னிந்திய ரெயில்வேத் தொழிலாளர்களின் புனிதமாய வேலை நிறுத்த இயக்கம் வலுப்பட்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகள் திருப்திகரமாய் முடிவுறுமென யாம் எதிர்பார்த்திருந்தோம். அவ்வண்ணமே முடிவுறு மென்பதில் எட்டுணையும் சந்தேகத்திற்கிடமின்றி எங்கணும் வேலை நிறுத்தம் ஸ்திரமாயிருந்து வந்தது. தொழிலாள தோழர்களுக்கு நல்லகாலம் பிறந்துவிட்டதென நம்பியிருந்தோம். போலீஸார்கள் எத்துணை அட்டூழியங்கள் புரியினும், காட்டிக்கொடுப்பவர்கள் எவ்வளவு இடைஞ்சல்கள் இழைப்பினும், அரசாங்கத்தார் எவ்வித அமுல் நடத்தினும் தொழிலாளர்கள் மயங்காது கோரின வற்றைப் பெற்றே தீர்வார்களெனவே முரசொலித்தது. ஆனால் முடிவாக இப்போதேற்பட்டுள்ள நிலைமையை நினைக்குங்கால் தோழர்களின் துயரம் நீங்கினபாடில்லையே எனக் கலக்கமேற்படுகிறது.

ஏஜெண்டின் பிடிவாதக் கொள்கையையும், அரசாங்கத்தாரின் நியாயமற்ற தலையீடுதலையும், போலீஸாரின் அடாத காரியங்களையும் கண்டு மருண்ட சிலவிடங்களிலுள்ள தொழிலாளர்கள் தமது துரதிஷ்ட கதியை நினைத்து யாதொரு நிபந்தனையுமின்றி வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். ஆரம்பத்தில் ஒரு சிலர் வேலைக்குத் திரும்பினும் வேலை நிறுத்த வியக்கம் மனம் ஒப்பாத புள்ளிகளும், பத்திரிகைகளும் தொழிலாளர்கள் பெருவாரியாக வேலைக்குத் திரும்பிவிட்டார்களென பொய்ச் செய்தியைப் பரப்பி திடமுடன் வேலை நிறுத்தங்கொண்டிருக்கும் தொழிலாளர்களையும் கலைத்து விட்டார்கள். ஏழைத் தொழிலாளர்கள் என் செய்வர்? ஒருவருக்கேற்ற படி நமக்கும் என்ற முறையில் தமக்கு வேலையில்லாமல் பின் திண்டாட வேண்டுமேயென்ற பீதியின் மேல் வேலைக்குத் திரும்பினவர் பலராவர். பல விதத்தும் மயங்கிக்கிடக்கும் தொழிலாளர்களைத் தைரியப்படுத்திவிடாப்படியாய் வேலை நிறுத்தம் செய்து வர வேண்டுமென்று தலைவர்கள் கூட்டங்கள் கூட்டி இயக்கத்தை வலுப்படுத்திவிடாமல் அரசாங்கத்தார் ஆங்காங்கு 144 பிரயோகஞ் செய்துவிட்டார்கள். சிறைக்கூடம் தவக்கூடமேயாகும் என மதித்து உண்மைக் குழைக்கும் தலைவர்கள் 144 ஐ மீறி தம் மாலியன்றளவுழியக்கத் துக்குதவிபுரிந்து சிறை புக்கிவிட்டார்கள். இன்னும் உண்மைத் தலைவர்களில்லாமலில்லை. பலருண்டு. அவர்கள் நிலைமையை உத்தேசித்து 144 ஐமீறா மலிருக்கின்றார்கள். அவர்களுக்கு 144 இராமபாணமில்லை! அரசாங்கத்தின் நியாயமற்ற உதவியும், நம்மகத்துள்ள கோடாரிக்காம்புகளின் ஒத்துப்பாடலும் கண்ட ரெயில்வே ஏஜெண்டு ஒருபடி அதிகமாக, கேட்டுக்கொண்டிருக்கும் கோரிக்கைகளைப் புறக்கணித்ததோடு, பற்பல நிபந்தனைகளோடு அறிக்கைகளும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். வெள்ளையருக்கு வெள்ளையர் உதவி செய்தல் என்ற ரீதியில் அரசாங்கத்தார் கம்பெனியாருக்கு உதவி செய்யும்போது ஏஜெண்டு துறங்கிவிடுவாரா?

யார் யார் என்ன என்ன இடுக்கண்கள் புரிந்தாலும் வேலைநிறுத்தக் கமிட்டியின் மறு உத்தரவு வரும் வரையில் வேலைக்குச் செல்வதில்லையென்று பற்பல விடங்களில் உறுதிகொண்டிருந்தார்கள். நிலைமை ஒருவாறு தளர்ந்து வருவதையும், தளர்ச்சி யுறுதிருக்க உயிர்கொடுக்கும் தலைவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாலும், பொது ஜனங்களுக்கு பல அசௌகர்யங்கள் விளைவதாலும், தொழிலாளர் துயரத்தை இம்மட்டுமிருக்கிறதென்று காட்டிக் கொள்ளவேயன்றி ரயில்வே விஸ்டத்தைக் குலைப்பதற்காக வேலைநிறுத்தம் ஏற்பட்டதல்ல வாகையால் இது சமயத்தில் இம்மட்டும் அறிவுறுத்தியது போதுமென்பதாலும் [illegible] யொன்று நியமனமாகி வேலை நிறுத்தத்தை நிறுத்தி விடுமாறு முடிவு செய்யப்பட்டுவிட்டது. தலைவர்களெல்லாம் கைதியாகியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தொன்றும் தெரியவில்லை. பெரும் பாலான தொழிலாளிகள் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். வண்டிகளெல்லாம் வழக்கம்போல் ஓட ஆரம்பித்துவிட்டன. சிலவிடங்களிலுள்ள தொழிலாளிகள் கோரிக்கைகள் முடிவுறாமல் வேலைக்குத் திரும்புவதில்லையென தமது வேலைகளைராஜிநாமாச்செய்தும் வருகிறார்கள்.

இந்நிலையில் அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் மகாநாடு கூடி தொழிலாளர்களுக்காதரவான தீர்மானங்கள் பல நிறைவேற்றி தொழிலாளர்களின் குறை களைய இந்திய அரசாங்கத்திற்கெடுத்தியம்ப ஓர் கமிட்டி நியமித்திருக்கிறது. இம்மகாநாட்டின் விசேடத்தினால் அரசாங்கம் தொழிலாளர் குறை களைய முற்பட்டுவிடின் எல்லோரும் சந்தோஷிக்கத்தக்கதாகும்.

இப்போது வேலைநிறுத்த சம்பந்தமாய் கலகம் செய்தவர்களையும், வண்டிகளைக் கவிழ்த்தியவர்களையும், மற்றும் பல சட்ட விரோதக் காரியங்கள் செய்தவர்களையும் பிடிப்பதெனப் போலீஸார்கள் வெகு மும்மரமாய் சந்தேகப்பட்டவர்களை யெல்லாம் கைது செய்துவருகிறார்கள். தொழிலாளர்களைக் குரோதபுத்தியுடன் மடக்கிவிட வேண்டுமென்றிருக்கும் போது குற்றம் செய்தவரின்னர்; செய்யாதவரின்னர் என்பதையறிய அரசாங்கம் சிரத்தை கொள்ளாதென யாரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். எனினும் திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பது பொய்க்காது.

வேலைநிறுத்த ஆரம்ப முதலும், அதற்கு முன்னரும் தொழிலாளர் அனுதாபிகளான "திராவிடன்" ஆசியர் திரு. கண்ணப்பரும், "குடியரசு" ஆசிரியர் திரு. ராமசாமி நாய்க்கரும் வெகு பிரயாசையுடன் இவ்வியக்கத்திற்கு ஊழியம் புரிந்து வந்தது எல்லோருக்கும் தெரியும். இவர்களும் தம் கொள்கை மாறுக்குணத்தால் ஈரோட்டில் 144ஐ மீறிப் பிரசங்கம் [illegible] வருகிறது.

## நாடார் மஹாஜன சங்கம், பட்டிவீரன்பட்டி.

### கவுன்ஸில் மீட்டிங்கு.

விபவ ஆு ஆடி மீ 21௳ (5-8-28) ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு சங்கம் ஹாலில், நாடார் மஹாஜன சங்கம் வைஸ்பிரஸிடெண்டு, விருதுநகர் ஸ்ரீமான் எம். எஸ். பி. செந்திக்குமார் நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மீட்டிங் நடைபெற்றது. ஆஜராயிருந்த கவுன்ஸில் அங்கத்தினர்கள்:—

ஸ்ரீமான்களான எம். எஸ். பி. செந்திக்குமார் நாடார்—விருதுநகர், ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார், கே. எஸ். ய்ன். பெரியதம்பி நாடார்—பட்டிவீரன்பட்டி, பெ. சி. சிதம்பர நாடார்—விருதுநகர், சு. ஆ. முத்து நாடார், சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்—அருப்புக்கோட்டை, கே. முத்துக்குமார் நாடார், ப. வ. சோமசுந்தர நாடார், பெ. சு. பெரியசாமி நாடார், சிவ. அ. வாலசுப்பிரமணிய நாடார்—மதுரை, கூ. அ. காளியப்ப நாடார்—திலக்கோட்டை, மூ. வடிவேல் நாடார்—சமையநல்லூர், பி. கே. வி. அய்யம்பெருமாள் நாடார்—பட்டிவீரன்பட்டி, ஆர். கே. பழனிச்சாமி நாடார்—சின்னமனூர், எஸ். ஆர். சுவாமிக்காளை நாடார்—திருமலாபுரம், மு. சி. காமாக்ஷி நாடார்—திலக்கோட்டை, மீ. சி. சுந்தர நாடார்—போடிநாயக்கனூர்.

### நடபடிக்கைகள்,

1928-ஆு எப்பிரல் மீ 1௳ முதல் ஜூன் மீ 30௳ யோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும் வரவு செலவு கணக்குகளையும் பற்றிய காரியதரிசிகளின் ரிப்போர்ட்டு ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்களால் வாசிக்கப்பெற்று ஒப்புக்கொள்ளப்பெற்றது.

அடியிற்கண்ட 10 ஆர்டினரி அங்கத்தினர்கள்நாமினேஷனில்கவுன்ஸில் மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

ஸ்ரீமான்களான பா. ம. பாண்டிய நாடார், வி. எ. புன்னையப்ப நாடார்—மதுரை, அ. சு. சொ. ச. சங்கரபாண்டிய நாடார், வி. ஏ. வி. பழனியப்ப நாடார்—விருதுநகர், வீ. டீ. வீ. பழனிச்சாமி நாடார், பி. ஆர். முத்தையா நாடார், ஆ. மூக்க நாடார், ஓ. வெ. கருத்தபாண்டிய நாடார், தெ. வ. மா. வன்னியப்பெருமாள் நாடார், தா. சி. இராமசாமிநாடார்-பட்டிவீரன்பட்டி.

5—7—28 ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானப்படி ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் இரண்டாவது லாட்டரிச் சீட்டு ஒன்று இரண்டு லக்ஷம் ரூபாயில் நடத்த வேண்டுமென்பதாக காரியதரிசி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் அவர்களால் பிரரேபிக்கப் பெற்று, போடிநாயக்கனூர் ஸ்ரீமான் மீ. சி. சுந்தர நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஏக மனதாய் தீர்மானிக்கலாயிற்று.

சங்கத்திற்கு ஜீவிய அங்கத்தினர்கள் சேர்ப்பதைக் குறித்து அடியிற்கண்ட பிரகாரம் உபவிதி திருத்தப்பட்டது:—

ரூல் 7 ல் A—பாராவில் ஸ்பெஷல் அங்கத்தினர் வருடமொன்றுக்கு குறைந்தது ரூ 12 (பன்னிரண்டு) சந்தா கொடுக்க வேண்டும்; அல்லது மொத்தமாக ஒரே தடவையில் ரூ 60 (அறுபது) சந்தாக்கொடுப்பவர்ஜீவியகாலஸ்பெஷல் அங்கத்தினராக இருந்துவருவார்.

ரூல் 7 ல் B—பாராவில் ஆர்டினரி அங்கத்தினர் வருடமொன்றிற்கு சந்தா ரூ 1 (ஒன்று) கொடுக்கவேண்டும்.

ஸ்காலர்ஷிப் கமிட்டியாரின் ரிப்போர்ட்டு காரியதரிசி ஸ்ரீமான் கே. எஸ். கா. பெரியதம்பி நாடார் அவர்களால் வாசிக்கப்பெற்று அடியிற்கண்ட மாணவ மாணவிகளுக்கும், எலிமெண்டரி ஸ்கூல்களுக்கும் 1928—29 ம் வருடத்திற்கு ஸ்காலர்ஷிப்பும், கிராண்ட்டும் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று:—

### மாணவ மாணவிகள்.

(1) திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜ் வி. எஜர்டாஸ் பி. ஏ. ஸீனியர் ரூ 144. (2) மதுரை அமெரிக்கன் காலேஜ், ஏ. நல்லையா ஷை ரூ 144. (3) பாளையங்கோட்டை செண்ட் சேவியர் காலேஜ் டி. எஸ். அய்யாத்துரை ஷை 144. (4) திருச்சி நாஷனல் காலேஜ் எம். சுப்பையா ஜூனியர் ரூ 144. (5) ஷையூர் பிஷப்கிபர் காலேஜ் ஜி. தானியேல் துரைசாமி ஷை ரூ 144. (6) திருநெல்வேலி ஸெயின்ட் ஜான்ஸ் காலேஜ் ஜே. எஸ். தாமஸ் செல்லையா ஷை 144. (7) ஷையூர் ஹிந்து காலேஜ் பி. சுப்பிரமணியம் யப். ஏ. ஸீனியர் ரூ 108. (8) பாளையங்கோட்டைசாராடக்கர் காலேஜ் ஏ. எஸ். அழகம்மாள் ஷை ரூ 108. (9) மதுரை அமெரிக்கன் காலேஜ் ஈ. சின்னப்பன் ஷை ரூ 108. (10) மதுரை, அமெரிக்கன் காலேஜ் டி. முத்துச்சாமி எப். ஏ., ஜூனியர் ரூ 108. (11) பாளையங்கோட்டை, ஸி.யம். எஸ். ஹைஸ்கூல் எஸ். சுந்தரராஜ்பாரம் 6 ரூ 48. (12) போடி, விக்டோரியா மெமோரியல் ஹைஸ்கூல் வி. காளியப்பன் பாரம் 5 ரூ 48. (13) இட்டமொழி, ஏ. வி. ஜோசப் ஹைஸ்கூல் பி. வி. சாமுவேல்பாரம்4 ரூ 48. (14) ஸ்ரீவைகுண்டம், கார்னேஷன் ஹைஸ்கூல் பி. மஹாலிங்கம் ஷை ரூ 48. (15) மெய்ஞ்ஞானபுரம், ஹைஸ்கூல் ஜி. அல்பெர்ட்ஸ்மைலிஸ் ஷை ரூ 48. (16) அருப்புக்கோட்டை, ஏ. யம். எலிமெண்டரி ஸ்கூல் அருமைநாயகம் அம்மாள் பாரம் 2 ரூ 32. ஆக ரூ 1568.

### ஸ்கூல்கள்.

(1) வத்திராயிருப்பு, நாடார் எலிமெண்டரி ஸ்கூல் ரூ 84.
(2) சுப்பிரமணியபுரம், நாடார் இந்து ஸ்கூல் ரூ 48. (3) அருங்குளம், நாடார் க்ஷத்திரிய எலிமெண்டரி ஸ்கூல் ரூ 72. (4) மங்காபுரம், நாடார் எலிமெண்டரி ஸ்கூல் ரூ 60. ஆக ரூ 264.

சைமன் கமிஷனுக்கு யாதாஸ்து அனுப்புவதற்கு சங்கம் காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கலாயிற்று.

சங்கத்திற்கு அதிகமான அங்கத்தினர் சேர்ப்பதைக்குறித்து லாட்டரிச் சீட்டு விற்கப்போகும் போதும் இன்னும் மற்ற சமயங்களிலும் சங்கத்திற்கு ஜீவிய அங்கத்தினர்களும், ஸ்பெஷல் அங்கத்தினர்களும், ஆர்டினரி அங்கத்தினர்களும் சேர்த்துக் கொடுப்பதற்கு நாடார் மக்கள் அனைவரும் தீவிர முயற்சி எடுக்குமாறு தீர்மானிக்கலாயிற்று.

நாடார் பாங்குக்கு பங்கு சேகரிக்க துண்டுப்பிரசுர மூலமாக முதல்முதலாக பிரசாரம் செய்வதாகத் தீர்மானமானது. கடைசியில் வந்தனோபசாரத்துடன் மீட்டிங்கு 11 மணிக்கு இனிது முடிவு பெற்றது.

[illegible]
கே. எஸ். கா. பெரியதம்பி நாடார்
காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கமுதியில் சுயமரியாதை பிரசாரம்.

மானாமதுரையிலிருந்து சுயமரியாதைப் பிரசாரகர்களான திருவாளர்கள் அ. கு. சி. குழந்தைவேல் முதலியாரவர்களும், போடம்பட்டி தி. கருப்பையா பிள்ளையவர்களும் 28—7—28-ல் இந்நகருக்கு விஜயம் செய்தார்கள். பல முக்கியஸ்தர்களை நேரில் கண்டு பேசினார்கள். 29-7-28 மாலை 7-30 மணிக்கு வித்தியாபிவிர்த்தி சங்கத்தின் முன் பாரோபஜார் வீதியில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் பல முக்கியஸ்தர்களுமாக சுமார் 200 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். திரு. உ. கு. சண்பகமுத்துப்பாண்டியர் அவர்கள், திருவாளர். டி. செல்லையாநாடார் அவர்களை அக்கிராசனம் வகிக்குமாறு பிரரேபித்தார். கரகோஷத்துடன் அக்கிராசனரவர்கள் ஆசனத்திலமர்ந்து சுயமரியாதை பிரசாரகர் திரு. தி. கருப்பையாபிள்ளையவர்கள் சுமார் 9 வருஷங்களுக்கு முன் இவண் விஜயம் செய்து உபன்யாசிக்கும்போது இப்பதவி வகித்ததாகவும், அம்மாதிரியே இன்று இப்பதவி வகிக்க சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி திலாகிப்பதாகவும், பிள்ளையவர்களின் அரிய தேச சேவை பெரிதும் போற்றத்தக்கதெனவும், வைக்கம் வீரர் சுயமரியாதை இயக்கத் தலைவர் உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் அவர்கள் நம் தேசத்திற்கும் நம் மக்களுக்கும் புரியும் தொண்டு எம்மட்டும் புகழத்தக்கதாகுமெனவும் முகவுரை கூறி முடித்தனர்.

திருவாளர் தி. கருப்பையாபிள்ளையவர்கள் 'சுயமரியாதை இயக்கமும், நமது கடமையும்' என்பதைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதின் சாராம்சமாவது:— "நம் ஒடுக்கப்பட்ட சகோதரர்களின் நிலைமையும், நம் ஏழை மக்களின் பரிதாப நிலைமையும் கவலைக்கிடமாயிருக்கின்றன. பிராமணர்கள் சுயநல சூழ்ச்சிகளால் நம் தேசத்திற்கும் நம் மக்களுக்கும் செய்து வந்த—வருகிற கொடுமைகள் பல பல. அவர்கள் ஏற்படுத்திய புராணங்கள் மனுஸ்மிருதி முதலிய குப்பைகளினால் நம் மக்கள் ஏமார்ந்துகொண்டு எதை எடுத்துக்கொண்டாலும் பாவம் பாவமென்று இருக்கும்படி செய்துவிட்டு நம் தேசத்தையும் நம் மக்களையும் பஞ்சைகளாக்கிவிட்டார்கள்.

மேல் நாட்டார்கள் கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், கூட்டுறவு சங்கம், பாங்கு, ரசாயனம் முதலியவற்றில் இன்றைக்கு எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள்! நம் தேசம் மேல் கண்டவற்றில் இன்றைக்கு எவ்வளவு பிற்போக்கடைந்திருக்கிறது! இந்நிலைமைக்கு என்ன காரணம்? நம் இரு மக்களுக்கும் கல்வி போதாமையால் வந்த விபரீதமேயாகும். ஆனதால் நம் ஆண், பெண் இரு பாலார்களுக்கும் 15, 10-வயது வரை கல்வி பயில்விக்க வேண்டும். நம் பெண் மக்களின் அடிமைக் கட்டுப்பாட்டை அறவே நீக்கிவிட வேண்டும். அவர்களும் சுயமரியாதையுள்ள வீரத் தாய்மார்களா யிருக்க வேண்டும். அவர்களின் அடிமைத்தனத்தை நீக்கிவிட்டால் நம் தேசமும் அடிமைத்தனம் நீங்கி சுயேச்சையுள்ள நாடாக சிறந்துவிளங்கும். நம் சுதிமோட்சம் அவர்கள் கையில் தானிருக்கிறது. ஆனதால் அடிமையை நீக்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும்.

பிராமணரல்லாதார் சுப அசுப காலங்களில் பிராமணப் புரோகிதத்தை நீக்கி தங்கள் தங்கள் குருவைக்கொண்டோ அல்லது பெரியோர்களைக்கொண்டோ கிரியைகள் நடத்தவேண்டும். பிராமணப் புரோகிதரை வைத்து நடத்துவது நம் மக்களுக்குச் சுயமரியாதைப் பங்கமும் வீண் விரயமும் விளைப்பதாகும். சமீபத்தில் விஜயம் செய்யும் ராயல் கமிஷனை வரவேற்று நம் மக்களின் குறைகளை எடுத்துச் சொல்லி சீர்திருத்தம் செய்து கொள்ளவேண்டும். அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமென நம்புகிறேன். ஸ்ரீ ஈ. வெ. ராமசாமிநாயக்கரவர்கள் ஓர் உண்மைச் சீர்திருத்தக்காரர். அவர் நாட்டுக்கும், நம் மக்களுக்கும் புரிந்த-புரிகிற சேவைகள் எண்ணற்றன. அவர் படும் பாடெல்லாம் மக்களை மூடப் பழக்க வழக்கங்களினின்றும் விடுவித்து அறிவுப் பிரகாசத்தில் நிறுத்தி அடிமை விலங்கு தறித்து முன்னேற்றப் பாதையில் ஓடச்செய்ய [illegible]

அவர் போராடும்போது சிலர் மதம் போச்சு; தெய்வம் போச்சு; நாஸ்திகவாதமாச்சு என கூக்குரலிடுகின்றனர். அவர்களும் உய்த்துணர்ந்தால் உண்மையறியாமற் போகார்கள்.

இந்நகரில் சுயமரியாதைச் சங்கமொன்று ஸ்தாபிதம் செய்யவேண்டும். ஸ்தாபித்து மக்களிடை சுயமரியாதை உணர்ச்சி பரப்பிக் கொண்டிருக்கவேண்டும். சுயமரியாதை உணர்ச்சி யூட்டும், "குடியரசு", "திராவிடன்", "நாடார் குல மித்திரன்" முதலிய பத்திரிகைகளை ஒவ்வொருவரும் வாசித்து அவற்றைச் சந்தாதாராயிருந்து ஆதரித்து வரவேண்டும்."

பின் அக்கிராசனரவர்கள் முடிவுரையாக நம் நாடும் நம் மக்களும் அடிமைத்தனத்திற்குக் காரணம் நாம்தானென்றும் நம் ஆண் பெண் என்ற இருபாலார்களுக்கும் கல்வி இல்லாத குறையினால் வந்த தோஷமென்றும் ஆனதால் கட்டாயக் கல்வி பயில்விக்க வேண்டுமென்றும், வரப்போகிற ராயல் கமிஷனை வரவேற்க வேண்டுமென்றும், ஸ்ரீமான் பிள்ளையவர்கள் கமத்தியில் சொன்ன வாக்கியங்களைச் சிரமேற்கொண்டு அனுஷ்டானத்திற்குக் கொணர வேண்டுமென்றும் சொல்லி முடித்ததும் கூட்டம் இரவு 11-மணிக்கு கரகோஷத்துடன் இனிது முடிவெய்தியது. சுபம்.

கு. ஊ குழந்தைவேல் பாண்டியர்,
கமுதி.

## "நாடார் மாணவர்கள் சங்கம்" திருச்சினாப்பள்ளி.

சுமார் 1923-ம் வருடத்தில் வாசித்து வந்த நம் குல மாணவர்கள் நம்முடைய கல்வி அபிவிருத்திக்காகவும், நம் குல முன்னேற்றத்துக்காகவும், நம் தேசிய நலத்திற்காகவும் இச்சங்கத்தை ஏற்படுத்தினார்கள். அவ்வண்ணமே இச்சங்கம் ஓங்கிவளர்ந்து ஆண்டு தோறும் அதிவிமரிசையாய் வருடாந்தரக் கொண்டாட்டங்களில் நம் குலாபிமானிகளில் சிலராகிய ஸ்ரீமான்கள் சௌந்தரபாண்டியநாடார், ஆறுமுகச்சாமிநாடார், இராமசாமிநாடார், சிதம்பரநாடார் முதலியவர்களை அக்கிராசனாதிபதிகளாக வரவேற்றுச் சிறந்து விளங்கா நின்றது.

சென்ற வருடத்தில் நம்முடைய இச்சங்கம் அதிக உற்சாகத்துடனும், சிறப்புடனும்காரியதரிசிஸ்ரீ கு. மு. சுப்பையா, பொக்கிஷதார் ஸ்ரீ கூ. ஆறுமுகம் முதலியவர்களால் ஒழுங்காய் நடத்தப்பட்டது. அவ்வருடத்தில் நம் குல முன்னேற்றம், பலியிடுதலும் ஜீவகாருண்யமும், நம் பாரத நாட்டின் தற்கால நிலைமை, நட்பு இன்னும் பல அரும் பெரும் விஷயங்களைப்பற்றி சொற்பொழிவுகள் நடாத்தப் பெற்றன. வருடாந்தரக் கொண்டாட்டமும் ஸ்ரீமான் டாக்டர் முத்துசாமிநாடார் அவர்கள் தலைமையின் கீழ் நன்கு நிறைவேறியது.

இவ்வருடத்தில் ஆரம்பக்கூட்டம் ஜூலை மாதம் 8-ம் தேதி மாலை 4 மணிக்குக் கூடிற்று. அவ்வமயம் முழுமனதுடன் மிஸ்டர் கு. மு. சுப்பையாவைக் காரியதரிசியாகவும் மிஸ்டர் சி. ரெங்கசாமியைப் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுத்தார்கள். வாரத்துக்கொரு முறை கூட்டம் ஒழுங்காய் நடந்து வருகின்றது.

கு மு. சுப்பையா,
காரியதரிசி.

## இருபதுமைல் கடிகாரம்.

இருபது மைல் தூரம் வரையில் காலந்தெரிவிக்கக் கூடிய மின்சார கடிகாரம் பால்டிமோர் எனுமிடத்தில் அமைத்திருக்கிறார்கள். பத்து அடி உயரமுள்ள எண்கோண வடிவமான பெரிய லாந்தருக்குள் ஒவ்வொன்றும் 25,000 மெழுகுவர்த்தி வெளிச்சமுள்ள 16 மின்சார விளக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் நான்கு சிவப்பு விளக்குகள் 12 வெள்ளை விளக்குகள் சிவப்பு விளக்குகள், கால் மணிக்கு ஒன்றும், அரை மணிக்கு இரண்டும், முக்கால் மணிக்கு மூன்றும், ஒரு மணி ஆனதும் நான்கும் பளீர் என்று ஒளி வீசுகின்றன. சிவப்பு விளக்குகள் ஒளி வீசி நின்றதும், வெள்ளை விளக்குகள் எவ்வளவு மணியோ அவ்வளவு முறை ஒளி வீசுகின்றன. மூடுபனி இல்லாத காலங்களில் இந்த ஒளி வீச்சுகள் இருபது மைல் தூரம் வரை தெரிகின்றனவாம்.

## பூரண ஒற்றுமையில்லை.

நமது மித்திரனின் 16—7—28 சஞ்சிகை அனுபந்தத்தில்-ஈ—பக்கத்தில் நிலக்கோட்டை எஸ். பி. யன். செட்டியார் "இராசியாயினர்" என்று தலையங்க மிட்டு எழுதியுள்ள வியாசத்தைப் பார்வையிட்டோம். அதில் பட்டிவீரம்பட்டி ஸ்ரீமான்களான ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார், எம். எல். ஸி அவர்களும், கூ. ச. நா. பெரியதம்பி நாடார் அவர்களும் காமாக்ஷிபுரம் நாடார்களின் ஒற்றுமை ஆக்கத்திற்குச் சென்றக்கால் அவர்களிருவருக்குள் நீண்டகாலமாயிருந்து வந்த மனஸ்தாபம் நீங்கப்பெற்று இராசியாயினர் என்றும், காமாக்ஷிபுரம் நாடார்களின் ஒற்றுமை நிறுவி விட்டுத் திரும்புகாலில் ஒரேகாரில் சென்றார்களென்றும் வரைந்திருக்கிறார். அப்பிரமுகர்களிருவரும் இராசியானது பற்றி எமக்கும், பொதுவாக நாடார் மகாஜனங்களுக்கும் பெரிதும் சந்தோஷம் மொழிக்கிறதென்பதில் சந்தேகமின்று. ஆனால் காமாக்ஷிபுரத்திற்கு ஒற்றுமை ஆக்கத்தின் பொருட்டு விஜயம் செய்த அவர்கள் பூரணமான ஒற்றுமையுண்டு பண்ணிவையாது திரும்பி விட்டது விசனிக்கத் தக்கதாகும். பூரண வொற்றுமை யுண்டாகா திருக்க திரு. செட்டியார் வியாசத்தில் ஒற்றுமை நிறுவி விட்டு என்றிருப்பது பொருத்தமில்லையெனினும், எதிர்கால ஒற்றுமைக்கு அறிகுறியான மங்கள வாக்கிய மெனக் கொள்கிறோம். கூடிய சீக்கிரத்தில் மேற்கூறிய தலைவர்களிருவரும் காமாக்ஷிபுரம் நாடார்களின் பூரண ஒற்றுமைக்கு வேண்டிய பிரயாசை யெடுத்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

எ. டி. முத்துச்சாமி கவிராயர்,
காமாக்ஷிபுரம்.

## மதுரை நாடார் ஊழியப்பிரசுர சபை.

## ஜாதி முன்னேற்ற மொழிகள்.

நாடார் மகாஜனங்களே!

நீங்களும் உங்கள் சந்ததிகளும் க்ஷேமமாகவும் செல்வாக்குடனும் வாழ்வதற்கு ஆசையுண்டா? அப்படியானால்:-

நமக்குள்ளிருந்துவரும், மூடக்கொள்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் தகர்த்தெறிந்து மறைந்துகிடக்கும் புதிய சக்தியுடன் பிரகாசிக்க வேண்டும்.

நமது கல்யாணம், சுப, அசுப காரியங்களில் அனாவசியமாகச் செய்துவரும் செலவுகளை நீக்கிச் சிக்கன முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

நாம் எக்காலத்திலும் ஆடம்பர வாழ்வில் ஆசைகொள்ளவே கூடாது.

நமது இனத்தவரை ஆதரிக்கும் தயாள குணத்தைக் கைக்கொண்டு, குலாபிமானம் கொளுந்துவிட்டெரியச் செய்யவேண்டும்.

நாம் பணத்தை பத்திரப்படுத்தி, அதை அபிவிருத்தி செய்து, பெருகச் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்.

நவீன நாகரீகத்தையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து ஆச்சாரமாக நடந்துகொள்ளவேண்டும்.

நமது ஆண், பெண் குழந்தைகளைக் கல்வி கற்கச்செய்யும் விஷயத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும்.

நமது மகாஜன சங்கத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அதன் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

நமது வியாபாரம், விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றை ஐரோப்பியர் செய்வதுபோன்று நூதன முறைகளில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நடத்தி முன்னணியில் நிற்கவேண்டும்.

## ஓர் பெண் கொலை.

## கொன்றவனும் குத்திக்கொள்ளல்.

இலங்கையில் அட்டனைச் சேர்ந்த வெள்ளைவர என்ற தோட்டத்தில் தலைமை கங்காணியாயிருந்து வரும் வடிவேல் என்பவருக்கு இரண்டு புத்திரிகளும் ஒரு புதல்வனுமுண்டு. அவர்களில் மூத்த மகளை தனது சகோதரி மகனுக்கு கல்யாணம் செய்து கொடுத்திருந்தார். அம் மகளுக்கும் மருமகனுக்கும் மன ஒற்றுமையற்றுப்போக மருமகன் மறு விவாகத்திற்கு இளைய மகளைக் கொடுக்கும்படி அவரைக் கேட்டார். அதற்கவர் மறுதலித்து விட்டார். இம்மறுதலித்ததே பின்வரும் கொலைக்குக் காரணமாயிருக்கவேண்டும். மருமகன் மாமனார் வீட்டிலேயேஇருந்து வந்தான். இப்படியிருக்குங்கால் 27-7-28 அவனது மாமனாரும், மாமியாரும் கதிர் காமத்திற்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். வீட்டில் மருமகனும், மகனும், இளைய மகளுமாக மூவர் இருந்தனர்.

1-8-28-ல் மாலை 5-மணி இருக்கும். மகன் வெளியே போய்விட்டான். வீட்டில் மருமகனும், இளைய மகளுமிருந்தார்கள். இருவரும் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். என்ன நினைத்தானோ பாவி! கத்தியை எடுத்து பெண்ணை மார்பிலும் தொடையிலுமாகக் குத்திக்கொன்றான்.

கொன்றவுடனே அம்மாதை ஒரு பக்கத்தில் தூக்கிக்கொண்டு வைத்து அவன் மேலேறி நின்றுகொண்டு தன்னையும் குத்திக்கொண்டு வீழ்ந்தான். ஆனால் அவன் சாகவில்லை. ஜனங்கள் கூடினர். உடனே அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். சிகிச்சை நடந்து வருகிறது.

சு. பெ. பொன்னுச்சாமிநாடார்,
டிக்கோயா.

## வாலிப நாடார் ஐக்கிய சங்கம், குளத்தூர்.

## திறப்பு வைபவம்.

குளத்தூரில் பொதுநலங் கருதிய புண்ணிய சீலர்களும், பரோபகாரிகளுமாகிய ஸ்ரீமான்கள் வெ. முருகப்ப நாடார், மு. பெத்தய்யா நாடார், பி. சண்முக நாடார், ஸ்கூல் எட்மாஸ்டர், ஆர். முத்துச்சாமி நாடார், க. சு. புழுதியாண்டவ நாடார், கு. மாயாண்டி நாடார் முதலியவர்களின் உழைப்பாலும் மற்றும் அருள் நிறைந்த பல்லோர்களுடைய முயற்சியினாலும் இராமாயணச் சாவடியில் இரவு மணி 9–30 க்கு ஸ்ரீமான் சி. பு. ம. கா. ராமையா நாடாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம் கூட்டப்பெற்று, "வாலிப நாடார் ஐக்கிய சங்கம்" என்ற நாமதேயத்துடன் ஓர் சங்கம் கனம். அக்கிராசனரவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அவ்வமயம் பல அறிஞர்கள் உபந்நியாசம் செய்தார்கள். சங்கத்துக்கு 32 மெம்பர்கள் சேர்ந்தும், சந்தா வசூலிக்கப்பட்டும், பெருந்தகைமையாளர்களால் நன்கொடை யளிக்கப்பட்டும், கருணையுள்ள தரும சீலர்களால் சங்கத்துக்கு அத்யாவசியமான கருவி, சாதனங்கள் உதவி புரியப்பட்டும் "நாடார் குல மித்திரன்" "நாடார் நண்பன்" "சுதேச மித்திரன்" "தமிழ் நாடு" "குடியரசு" முதலிய பத்திரிகைகள் தருவிக்க வேணுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பெற்று மான பின் தேசிய கீதங்கள் பாடப்பெற்று ஆன்றோர்களால் ஆசிகள் கூறப்பட்டு, சந்தனம் புஷ்பம், தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

வயி. ரா. தங்கஸ்வாமி,
காரியதரிசி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## காந்தி சரித்திரம்.

### பாகம் 5. அத்தியாயம் 11.

#### ஒப்பந்தக் கூலிகள் முறை எதிர்ப்பு.

இப்போது ஆசிரமத்துக்கு உள்ளும், புறமும் இருந்த மனஸ்தாபங்களைப் பற்றியெல்லாம் சிறிது மறந்திருந்தது. இச்சமயத்தில் நான் கவனத்தைச் செலுத்திய முக்கிய விஷயத்தைப்பற்றி சிறிது கவனிப்போம்.

ஒப்பந்தக் கூலிகள் முறை என்றால் ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்கு வேலை செய்ய வேண்டு மென்னும் ஒப்பந்தத்துடன் இந்தியக் கூலிகளை அன்னிய நாடுகளுக்கு அழைத்துச் செல்வ தென்பதாம். 1914 ஆம் வருஷத்தில் ஏற்பட்ட ஸ்மட்ஸ்- காந்தி ஒப்பந்தப்படி, ஒப்பந்தக் கூலிகளுக்கு கேட்டாவில்விதிக்கப்பட்டுவந்த மூன்று பௌன் வரியை எடுத்து விட்டார்கள். ஆனால் இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட இந்தியக் கூலிகள் விஷயத்தில் இன்னமும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. 1916 ஆம் வருஷம் மார்ச் மாதத்தில் பண்டித மதன மோகன மாளவியா இந்தியாசட்ட சபையில் ஒப்பந்த முறையை நீக்கிவிட வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். லார்டு ஹார்டிஞ்ச் அத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டு "தக்க காலத்துக்குள் அம்முறையை ஒழித்துவிட சக்ரவர்த்தியிடமிருந்து வாக்குறுதியைப் பெற்றிருப்பதாக" கூறினர். ஆனால் அத்தகைய வெறும் வார்த்தையினால் இந்திய மக்கள் திருப்தியடைந்து விடுவார்களென்று நான் நினைக்கவில்லை. ஆகவின் அம்முறையை உடனே ஒழித்துவிடுவதற்காக ஒரு கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டியது அவசியமென்று நினைத்தேன். இந்தியா அசிரத்தையாய் அம்முறையைப் பொறுத்துக் கொண்டிருந்த போதிலும், அக்குறையை நிவர்த்திப்பதற்காக ஜனங்கள் போராட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் நினைத்தேன். நான் சில தலைவர்களை இது விஷயமாக நேரில் கண்டு பேசியதுடன் பத்திரிகைகளுக்கும் எழுதினேன். இதனால் பொதுஜன அபிப்பிராயம் என் சார்பாகவே இருக்கிற தென்பதையும் உணர்ந்தேன். ஆதலின் சத்தியாக்கிரகம் தொடங்குவதற்கு இப்பிரசினை சௌகரியமானதாகுமா என்ற சிந்தனை உதயமாயிற்று. ஏற்ற விஷயமே என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஆனால் அதை எவ்வாறு நடத்துவது என்னும் கவலைதான் அதிகரித்தது.

#### இந்தியா சட்டசபை விவாதம்.

இதற்கிடையில் வைசிராயும் "சிறுகச் சிறுக நிறுத்துவது" என்பதற்கு காலா காலங்களில் ஒழிப்பதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டு வந்து, தக்க காலத்தில் நிறுத்துவது என்று வியாக்கியானம் பகிரங்கமாகச் செய்து வந்தார். ஆதலின் 1917 ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஒப்பந்தக்கூலிகள் முறையை உடனே ஒழிப்பதற் கேற்ற மசோதாவை இந்தியா சட்டசபையில் கொண்டுவர அனுமதி கேட்டார். ஆனால் லார்டு செம்ஸ்போர்டு மறுத்து விட்டார். அப்போது தான் நானும் நாடு பூராவும் சுற்றி அகில இந்திய இயக்கத்தை ஆரம்பிக்கச் சௌகரியமான கால மென்று கருதினேன்.

ஆனால் கிளர்ச்சியை எழுப்புவதற்கு முன், வைசிராயைப்பேட்டிகண்டு இவ்விஷயமாகப்பேசுவதுநலமென்று கருதி அவரைப் பேட்டி காண அனுமதி கேட்டேன். உடனே அனுமதியும் கிடைத்தது. இப்போது ஸர். ஜான் மாபே யாய் இருக்கும் ஸ்ரீ. மாப்பே அப்போது வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார். நான் அவருடன் நெருங்கிப் பேசினேன். நான் வைசிராயுடன் திருப்திகரமாகச் சம்பாஷித்தேன். அவர், குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றுவதாகக் கூற விட்டாலும் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டார்.

#### பம்பாயில் பகிரங்கக் கூட்டம்.

நான் பம்பாயிலிருந்து என் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்தேன். இம்பீரியல் சிட்டிஷன்ஷிப் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டத்தைக் கூட்டுவதாக ஸ்ரீ. ஜஹாங்கீர் பெடிட் ஒப்புக்கொண்டார். அக்கூட்டத்தில் கொண்டுவர வேண்டிய தீர்மானத்தை முன்னதாகவே தயாரிப்பதற்காக அச்சங்கத்தின் கமிட்டி கூட்டம் கூடியது. கமிட்டி கூட்டத்துக்கு டாக்டர். ஸ்டான்லி ரீட், ஸ்ரீ. லல்லுபாய் சமல்தாஸ், ஸ்ரீ. நடராஜன், ஸ்ரீ. பெடிட் ஆகியோர் வந்திருந்தனர். எந்தக் காலவரையறைக்குள் ஒப்பந்தக் கூலிகள் முறையை ஒழித்துவிட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டு மென்பதில் விவாதம் நடந்தது. "கூடிய விரைவில்," "ஜூலை மாதம் 31 ந்தேதிக்குள்," "உடனே ஒழித்தல்" என்று மூன்று யோசனைகள் கூறப்பட்டன. நாம் குறித்த காலத்துக்குள் சர்க்கார் நன்மை செய்யா விட்டால் நம் வேலையை நடத்திச் செல்வதற்காக ஒரு குறித்த காலத்தைக் குறிப்பதே நலமென்பதற்கு ஆ[illegible] அவர் 'உடனே' என்[illegible] 31-ந் தேதிக்கு முன்னர் [illegible]ரும்படும் என்று கூறினர். நா[illegible] "உடனே" என்பதற்கு [illegible] பொருள் தெரிந்து கொள்ள மாட்டார்களென்றும், ஜனங்களிடமிருந்து நாம் ஏதேனும் எதிர்பார்க்க வேண்டுமாயின் காலத்தைக் குறிப்பிடுவதே பொருந்து மென்றும், ஒவ்வொருவரும் "உடனே" என்பதற்குத் தங்க ளிஷ்டப்படி சர்க்கார் ஒரு வகையிலும், ஜனங்கள் மற்றொரு வகையிலுமாகப் பொருள் கொள்வார்களென்றும், ஜூலை 31ந் தேதிக்குள் என்பதால் தவறு ஒன்றுமில்லை யென்றும், அதற்குள் சர்க்கார் நிவர்த்தி செய்துவிட்டால் நாம் மேல் காரியத்தைக் கவனிக்கலாமென்றும் கூறினேன். என் விவாதத்தின் உண்மையை அறிந்து டாக்டர். ரீட்டும், சர். லல்லுபாயும் அதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். அதன்படி பொதுக் கூட்டத்திலும் ஜூலை 31ந் தேதிக்குள் ஒப்பந்தக் கூலிகள் முறையை ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தோம். அவ்வாறே நாடு முழுதும் பல கூட்டங்களிலும் தீர்மானிக்கப்பட்டது.

#### பெண்கள் ஆதரவு.

ஸ்ரீமதி. ஜெய்ஜி பெடிட் இவ்விஷயமாக வைசிராயைப் பேட்டி காண ஒரு பெண்கள் தூதுவக் கூட்டத்தைத் தயாரிப்பதில் தம் செல்வாக்கை யெல்லாம் உபயோகித்தார். பம்பாயிலிருந்து சென்று வைசிராயைப் பேட்டி கண்ட பெண்மணிகளில் லேடி டாடா, காலஞ்சென்ற தில்ஷத் பீகம் இவர்களைப் பற்றி எனக்கு நன்குக ஞாபகத்திலிருக்கிறது. வைசிராய் அவர்களுக்குத் திருப்திகரமான பதிலையே அளித்தார்.

நான் கராச்சி, கல்கத்தா முதலிய பல இடங்களுக்கும் சுற்றுப் பிரயாணம் சென்றேன். எங்கு போனாலும் திரளான கூட்டமும், மிக்க உற்சாகமுமே காணப்பட்டன. இவ்வியக்கத்தை ஆரம்பித்த போது இவ்வளவு உற்சாகத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை.

#### இரகசிய போலீஸ் தொல்லை.

அக்காலத்தில் நான் தனியாகவே பிரயாணம் செய்து வந்ததால் பல அனுபவங்களைக் கண்டுவந்தேன். இரகசிய போலீஸார் எப்போதும் என் பின் சுற்றிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் எதையும் மறைக்கும் வழக்கமில்லை யாதலால் அவர்களுக்கும் என்னால் தொந்தரவில்லை; அவர்களால் எனக்கும் கஷ்டமில்லை. அதிஷ்டவசமாக அப்போது எனக்கு மகாத்மா என்னும் பட்டம் கொடுக்கப்பட்டிருந்ததில்லை. ஆனால் என்னை அறிந்தவர்கள் உள்ள இடங்களில் அவ்வாறு கோஷமிடுவது [illegible] வழக்கமாயிருந்தது.

இரகசிய போலீசார் என்னைப் பல ஸ்டேஷன்களிலும் சந்தித்து என் டிக்கெட்டை வாங்கிப் பார்த்து அதன் எண்ணைக் குறித்துச் செல்வார்கள். நான் அவர்கள் கேட்கும் வினாக்களுக்கெல்லாம் விடையளித்து வந்தேன். என்னுடன் பிரயாணம் செய்தவர்கள் என்னை ஒரு சாது அல்லது பக்கீர் என்று கருதினர்கள். என்னை ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இரகசிய போலீசார் தொந்தரவு செய்வதைக் கண்டு அவர்களுக்குக் கோபம் வந்து விடும். ஆகவின், "அந்த சாதுவை ஏன் அவ்வாறு தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று கேட்பார்கள்: என்னைக் கண்டு "இந்த அயோக்கியர்களுக்கெல்லாம் உங்கள் டிக்கெட்டைக் காண்பிக்க வேண்டாம்" என்று கூறுவார்கள்.

அதற்கு நான், அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதாகவும், என் டிக்கெட்டைக் காண்பிப்பது ஒரு சிரமமான காரியமல்லவென்றும் கூறினேன். அவர்கள் திருப்தியடையாமல் என்னிடம் அதிக அனுதாபங்காட்டி இரகசிய போலீசார் அவ்வாறு செய்வதைத் தடுத்து விட்டார்கள்.

#### மூன்றுவது வகுப்பில் கஷ்டங்கள்.

மூன்றுவது வகுப்பு வண்டியில் ஏற்படும் கஷ்டங்களைக் கவனிக்கும் போது இரகசிய போலீசார் தொல்லை கஷ்டமாகத்தோன்றவில்லை. நான் லாகூரிலிருந்து டெல்லிக்குப் போகும் போது தான் அதிக கஷ்டத்தை யனுபவித்தேன். லாகூரில் ரயில் மாற்ற வேண்டியிருந்தது. நான் ஏறவேண்டிய ரயிலில் இடம் கிடைப்பது அரிதாயிற்று. வண்டி நிறைய ஜனங்கள் இருந்தார்கள். நான் கல்கத்தாவில குறிப்பிட்ட ஒரு கூட்டத்துக்குப் போக வேண்டியிருந்ததால் இவ்வண்டியை விட்டால் வேறு வண்டி கிடையாது. ஆயினும் எனக்கு இடம் கிடைக்குமென்று நினைக்கவே இல்லை. என்னை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் ஒரு போர்ட்டர் பன்னிரண்டு அணு கொடுத்தால் வண்டியில் ஏற்றுவதாகச் சொன்னான். அப்படியே கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டேன்; அவனும் என்னை வண்டியில் ஏற்ற எவ்வளவோ பிரயத்தனப்பட்டான். வண்டியிலிருந்தவர்களை என்னை ஏற்றும்படி கெஞ்சிக் கேட்டான். அவனாலும் முடியவில்லை. ஆனால் வண்டி புறப்படும் சமயத்தில் சில பிரயாணிகள் இடமில்லை யென்றும் என்னை உள்ளே நுழைந்தால் நான் நிற்க வேண்டியிருக்குமென்றும் கூறினார்கள். அதற்கும் நான் ஒப்புக்கொண்டேன். அவன் என்னை ஜன்னல் வழியாகப் புகுத்தினான். நான் அவனுக்கு பன்னிரண்டு அணு கொடுத்து விட்டேன்.

#### இங்கும் கடவுள் உதவி.

அன்றிரவு முழுதும் எனக்குச் சோதனைக் காலமாகவே இருந்தது. மற்ற பிரயாணிகள் எப்படியோ உட்கார்ந்து விட்டார்கள். நான் இரண்டு மணி நேரம் நின்றிருந்தேன். ஆனால் பிரயாணிகள் மட்டும் என்னை எங்கேயாவது உட்காரும்படி தொந்தரவுசெய்தார்கள். எங்கும் இடமில்லை யென்று கூறி அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றேன். ஆனால் அவர்கள் படுத்துக்கொண்டபடியே என்னை உட்காரும்படி மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்தார்களேயொழிய அவர்கள் எழுந்தபாடில்லை. அவர்களும் என்னைத் தொந்தரவு செய்வதில் சலிக்கவில்லை. நானும் சமாதானமாகப் பதில் சொல்வதில் பொறுமையை இழக்கவில்லை. இறுதியில் அவர்களில் அதிகம் கோபங்கொண்ட சிலர், என் பெயரைச் சொன்னதும் அவர்கள் தங்கள் நடத்தைக்காக வெட்கப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எனக்கு இடம் கொடுத்தார்கள். பொறுமையுடன் இருந்ததால் அதற்கேற்ற சன்மானம் கிடைத்தது. நான் அதிகம் களைப்புற்றிருந்தேன். தலை சுற்றிக்கொண்டிருந்தது. அத்தகைய அவசியமான வேளையில் கடவுள் எனக்கு உதவியை அளித்தார்.

#### சத்தியாக்கிரகத்தின் வெற்றி.

இவ்வாறு நான் டெல்லியை யடைந்து, அங்கிருந்து கல்கத்தா போய்ச் சேர்ந்தேன். கல்கத்தா கூட்டத் தலைவரான காசிம்பஜார் மகாராஜாவின் விருந்தினனாக இருந்தேன். கராச்சியிலிருந்தது போலவே கல்கத்தாவிலும் ஏராளமான கூட்டமும் அதிகமான உற்சாகமும் தென்பட்டது. பல ஆங்கிலேயரும் அக்கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

ஜூலை மாதம் 31-ந் தேதிக்குள் இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகளை ஏற்றும் முறையை ஒழிந்து விட்டதாக இந்திய சர்க்கார், அறிக்கையை வெளியிட்டார்கள்.

இம்முறையை எதிர்த்து முதன் முதலில் 1894 ஆம் வருஷத்தில் ஒரு மனுவைத்தயாரித்தேன். சர். டபிள்யூ. டபிள்யூ. ஹண்டர்கூறியதே போல், பாதி அடிமைத் தனமாக இருக்கும் இம்முறை என்றைக்கிருந்தாலும் ஒழிந்து விடுமென்று அப்போதே கருதினேன். 1894 ஆம் வருஷத்தில் ஆரம்பித்த இவ்வியக்கத்துக்குப் பலர் ஆதரவளித்தார்களென்பது உண்மையாயினும் சத்தியாக்கிரகத்தால் தான் விரைவில் வெற்றி கிடைத்ததென்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. அந்த இயக்கத்தைப்பற்றிய முழு விவரத்தையும் தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரக சரித்திரத்தில் காணலாம்.

## தூத்துக்குடி தக்ஷண நாடார் மகமை பரிபாலன சங்கம்.

### 1-4-27 முதல் 31-3-28 முடிய வரவு செலவு கணக்கு.

#### வருமானம்.

| | | | |
|---|---|---|---|
| 1–4–27ல் கையிருப்பு | 8 | 12 | 11 |
| மூலதனம் நாடார் பாங்கு பிக்சட் டிபாசிட் பேரால் ரூ. 1600 0 0, மூலதனம் சேவிங்ஸ் பாங்கின் பேரால் ரூ. 268 1 11 | 1868 | 1 | 11 |
| கட்டடங்களின் வாடகை | 1153 | 2 | 4 |
| கப்பல் ஏற்றுமதிகளின் மகமை | 24 | 15 | 1 |
| கப்பல் இறக்குமதிகளின் மகமை | 45 | 5 | 0 |
| பருத்தி வண்டிகளின் மகமை | 8 | 13 | 0 |
| தேங்காய் கடைகளின் மகமை | 1 | 14 | 0 |
| விறகுக் கடைகளின் மகமை | 1 | 4 | 0 |
| சந்தா பேரால் | 5 | 0 | 0 |
| கமிஷன் கடைகளின் | 6 | 13 | 9 |
| ஆதாயவரவு | 24 | 10 | 0 |
| சாக்கு வியாபாரிகளின் மகமை | 4 | 14 | 6 |
| சுமை மகமை | 19 | 1 | 11 |
| வண்டி மகமை | 13 | 10 | 9 |
| பொதி மகமை | 25 | 8 | 7 |
| தீபக்காசு மகமை | 25 | 2 | 6 |
| கொளும்பு ஆள் மகமை | 171 | 10 | 5 |
| பஜார் இரும்புக் கடைகளின் பேரால் | 85 | 10 | 0 |
| அனுமத் | 9 | 8 | 8 |
| ஆக ரூ. | 3503 | 15 | 4 |

#### செலவு.

| | | | |
|---|---|---|---|
| லைஸென்ஸ் ஸ்டாம்பு | 9 | 14 | 6 |
| ஜெனரல் மீட்டிங் | 60 | 1 | 6 |
| கணக்குப்பிள்ளைகளின் சம்பளம் | 517 | 6 | 0 |
| நானுவிதச் சிப்பந்திச் சிலவு | 123 | 0 | 5 |
| கட்டடங்களின் ,, | 765 | 11 | 0 |
| தர்மச் செலவு | 13 | 15 | 0 |
| கோர்ட்டுசெலவு | 65 | 4 | 0 |
| தீர்வைச் செலவு | 264 | 11 | 6 |
| தீபச் செலவு | 28 | 1 | 8 |
| நாடார் பாங்கு பிக்சட் டிபாசிட் | 1600 | 0 | 0 |
| டை சேவிங்ஸ் பாங்கில் இருப்பு | 13 | 15 | 7 |
| 31—3—28ல் கை இருப்பு | 41 | 14 | 2 |
| ஆக ரூ. | 3503 | 15 | 4 |

#### இயந்திரச் சிலந்தி.

லாஸ் ஏஞ்சல் படக் காட்சிக் கம்பெனியார் இயந்திர சிலந்திப் பூச்சியொன்றைச் செய்து வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு சிலந்தி ஒரு வாரத்தில் எத்தனை வலைகளைப் பின்னுகின்றனவோ அதைவிட அதிகமாக இயந்திரச் சிலந்தி பின்னி விடுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection